அத்தியாயம்
7

பன்னாட்டுப் பொருளியல்

"நாடுகளின் பொருளாதாரம் பொருள், வாணிகம் மற்றும் நிதி சந்தைகளால் இணைக்கப்பட்டுள்ளது".

– டார்ன்புஸ்ச், பிசர் மற்றும் ஸ்டார்ட்ஸ்

புரிதலின் நோக்கங்கள்

1 பன்னாட்டு வாணிபத்தின் அவசியத்தையும், அதன் கோட்பாடுகளையும் விளங்கிக் கொள்ளுதல்.

2 செலாவணி விகித நிர்ணயம், மாற்றம் மற்றும் பன்னாட்டு வாணிபச் செலுத்து நிலை ஆகியவற்றை புரிந்து கொள்ளுதல்

3 பன்னாட்டு வாணிகம் மற்றும் பன்னாட்டு நேரடி முதலீடு பற்றி நுண்ணறிவைப் பெற்றுக் கொள்ளுதல்.

7.1 அறிமுகம்

பன்னாட்டுப் பொருளியல் பாடம் சில அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க உருவாக்கப்பட்ட ஒரு எளிய பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டிலிருந்து தோன்றியது. முதன்முதலில் இப்பாடம் உலகத்தின் குறிப்பிட்ட பகுதியான மேற்கு ஐரோப்பாவில் உருவானது. ஆடம்ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ, டாசிக், ஹேபர்லர், ஜே.எஸ்.மில், பேலா பாலஸா போன்ற தொன்மைப் பொருளியல் நிபுணர்களின் பங்களிப்புகளால் பன்னாட்டுப் பொருளியலின் பாடப்பொருள் வடிவமைக்கப்பட்டது. பன்னாட்டுப் பொருளியல் பண்டங்கள், பணிகளின் வாணிபத்தை மட்டும் உள்ளடக்கிய சர்வதேசப் பொருளியல் நடவடிக்கைகளின் முழுப் பரப்பைப் படிப்பதோடு, மூலதன ஓட்டம், தொழில்நுட்ப மாறுதல், மாற்று விகிதப் பிரச்சினை, வாணிபச் செலுத்து சமநிலை, இறக்குமதி வரிகள், பாதுகாப்பு வாணிபக் கொள்கை, தடையற்ற வாணிபக் கொள்கை, முதலீட்டு ஓட்டம், தனிநாடுகளால் பின்பற்றப்படும் நிதி மற்றும் பணக்கொள்கைகளின் பங்கு ஆகியவற்றை ஒட்டிய கருத்துகளையும் கற்பிக்கிறது.

ஹேபர்லர்

12-Economics-Tamil-Chapter_7.indd 147 2/6/2020 12:19:52 PM

7.2 பன்னாட்டுப் பொருளியலின் பொருள் விளக்கம்

பன்னாட்டுப் பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பாடப்பிரிவாகும். எனவே, பன்னாட்டு வாணிகமே இப்பாடப் பிரிவின் பிரதான உள்ளடக்கமாகும்.

பன்னாட்டுப் பொருளியலை நாடுகள் ஒன்றை ஒன்று சார்ந்திருத்தல், இந்த சார்ந்திருத்தலை நிர்ணயிக்கும் காரணிகள் மற்றும் அதன் விளைவுகளை விளக்கமாக எடுத்துரைக்கும் பொருளியலின் சிறப்பு பாடப் பிரிவு எனலாம்.

7.3 பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம்

பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம் பல பாகங்களை உள்ளடக்கியது. அவை கீழ் கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. தூய வாணிபக் கோட்பாடு

நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான காரணங்கள், எந்த வகையான பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன, எந்தெந்த வகையான நாடுகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகிறது, வாணிகம் செய்யப்படும் அளவு, அயல் வாணிப விகிதம், பண மாற்று விகிதம் பன்னாட்டு பொருள் வாணிக செலுத்துநிலை மற்றும் அயல் வாணிக செலுத்து நிலை ஆகியவற்றை விவரிக்கும் பிரிவே தூய வாணிப கோட்பாடாகும்.

2. கொள்கைச் சச்சரவுகள்

நாடுகளுக்கிடையேயான வாணிக உறவுகளை கட்டுப்படுத்துவதா, தடைகளற்ற வாணிகத்தை அனுமதிப்பதா போன்றவற்றை இப்பிரிவு விவாதிக்கிறது. பொருள் வாணிகம் முதலீடு மற்றும் தொழில்நுட்பம் இடம் பெயர்தல், அயல் வாணிகத்தின் மீது வரிவிதித்தல், மானியம் வழங்குதல், பன்னாட்டு விலை பேதம், செலவாணிக் கட்டுப்பாடுகள், பன்னாட்டு நிதி உதவி மற்றும் பன்னாட்டுக் கடன் அன்னிய நேரடி முதலீடு, அயல்நாட்டுச் செலுத்துநிலைத் தீர்வுகள் ஆகியவை இந்தப் பிரிவின் கீழ் அடங்கும்.

3. பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்

இந்த பிரிவு பன்னாட்டுக் கூட்டமைப்பு, சுங்கவரி ஒன்றியங்கள், பணவியல் ஒன்றியங்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, அமைப்புகளின் மூலமாக நாடுகளின் பொருளாதாரம் இணைக்கப்பட்டுள்ளதை விவரிக்கிறது. பன்னாட்டு வாணிக நிறுவனங்களின் செயல்பாடுகளையும் இப்பிரிவு விவாதிக்கிறது.

4. பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள்

பன்னாட்டுப் பண நிதியம், மறு கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி (உலக வங்கி), உலக வர்த்தக நிறுவனம் மற்றும் வாணிகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு போன்ற பன்னாட்டு அமைப்புகள் நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கும் விதம் பற்றி இப்பிரிவில் புரிந்து கொள்ளலாம்.

12-Economics-Tamil-Chapter_7.indd 148 2/6/2020 12:19:52 PM

7.4 வாணிகம் – பொருள் விளக்கம்

வாணிகம் என்பது ஒரு சக்தி வாய்ந்த நாடுகளை இணைக்கும் கருவியாகும். பொருட்கள் மற்றும் பணிகளை மக்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்வதையே வாணிகம் என்கிறோம்.

வாணிகத்தை,

அ) உள்நாட்டு வாணிகம்

ஆ) பன்னாட்டு வாணிகம் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

7.4.1 உள்நாட்டு வாணிகம்

பொருட்கள் மற்றும் பணிகளை ஒரு நாட்டின் அரசியல் மற்றும் புவி எல்லைகளுக்குள் பரிமாறிக்கொள்வதை உள்நாட்டு வாணிகம் எனலாம். இதனை உள்ளூர் வாணிகம் அல்லது 'ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையிலான வாணிகம்' என்றும் அழைக்கலாம்.

7.4.2 பன்னாட்டு வாணிகம்

பொருட்கள் மற்றும் பணிகளை இரு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக்கொள்வதை பன்னாட்டு வாணிகம் எனலாம். இது நாடுகளின் எல்லைகளை கடந்து நடைபெறும் வாணிகம். இதை வெளிவர்த்தகம், அல்லது 'அயல் வாணிகம்' அல்லது 'மண்டலங்களுக்கிடையிலான வாணிகம்' என்றும் அழைக்கலாம்.

7.4.3 உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகள்

வ. எண்	உள்நாட்டு வாணிகம்	பன்னாட்டு வாணிகம்
1.	ஒரு நாட்டிற்குள் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே நடைபெறும் வாணிகம்	பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான வாணிகம்
2.	உழைப்பு மற்றும் மூலதனம் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல்	உழைப்பு மற்றும் மூலதனம் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது
3.	பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை	பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலை சுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் கடினமாக்குகின்றன.
4.	விற்றல் வாங்கலில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது	பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகிறது.
5.	புவி அமைப்பு மற்றும் கால நிலை சூழல் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும்	புவி அமைப்பு மற்றும் கால நிலை வேறுபடும் இயல்பு கொண்டவை

12-Economics-Tamil-Chapter_7.indd 149 2/6/2020 12:19:53 PM

6.	வாணிக மற்றும் நிதி நடைமுறைகள் ஒரே மாதிரியானவை	வாணிகம் மற்றும் நிதி நடைமுறைகள் வேறுபடும் போக்குக் கொண்டவை
7.	அரசமைப்புமுறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அரசின் கொள்கைகளில் வேறுபாடில்லை	அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள்மற்றும்அரசின்கொள்கைகளில் வேறுபாடுகளிருக்கும்

7.5 பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகள்

பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகள் தொன்மை கோட்பாடுகள், தற்கால கோட்பாடுகள் என கால அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன.

XN8B89

7.5.1 பன்னாட்டு வாணிப தொன்மை கோட்பாடுகள்

அறிமுகம்

ஆடம் ஸ்மித் 1776 ஆம் ஆண்டில் தனி அடக்கச் செலவு கோட்பாட்டினை விளக்கினார். இதை மேலும் செம்மை படுத்த டேவிட் ரிக்கார்டோ ஒப்புமை செலவுக் கோட்பாட்டினை விளக்கினார். இதை ஜெ.எஸ் மில், ஜெ.இ கெய்ர்னஸ், சி.எப் பாஸ்டபில், எப்.டபில்யூ டாசிக் மற்றும் காட்பிரய்ட் ஹாபெர்லர் போன்ற பொருளியல் அறிஞர்கள் செழுமைபடுத்தினார்கள். ஆடம் ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்கார்டோவின் கோட்பாடுகளை மட்டும் இங்கே கற்றுத் தெளிவோம்.

7.5.2. ஆடம் ஸ்மித்தின் முழுச் செலவுக் கோட்பாடு

வாணிபத்தடைகளற்றசூழலில்குறைவான அடக்கச் செலவில் பொருளுற்பத்தி செய்யும் தனி தேர்ச்சியை அடைவதினால் அனைத்து நாடுகளுக்கும் பன்னாட்டு வாணிகத்தின் பலன் கிடைக்குமென ஆடம் ஸ்மித் நம்பினார்.

தொன்மை வாணிபக் கோட்பாடுகள்

வணிகவாதம் (16 ம் நூற்றாண்டுக்கு முன்)

- நாம் – அவர்கள் வாணிபக் கருத்தைக் கொண்டது
- பிற நாட்டின் ஆதாயம் நம் நாட்டின் நஷ்டம்

தடையில்லா வாணிபக் கோட்பாடுகள்

- முழு நன்மை (ஆடம் ஸ்மித், 1776)
- ஒப்பீட்டு நன்மை (டேவிட் ரிக்கார்டோ, 1817)
- உற்பத்தியில் சிறப்புத்தேர்ச்சி, பண்டங்களின் தடையில்லா நகர்வு வாணிபத் தொடர்பு கொண்டுள்ள அனைத்துப் பொருளாதாரங்களுக்கும் நன்மை பயக்கும்.

தடையில்லா வாணிபம் சரிசெய்த கோட்பாடுகள்

- காரணி – சரிவிகிதம் (ஹெக் செர் – ஓலின் 1919)
- பன்னாட்டு பொருளின் வாழ்க்கை சுழற்சி (ரே வெர்னன் 1966)

ஆடம் ஸ்மித்தின் கோட்பாடு

ஆடம்ஸ்மித்தின் கருத்தின் படி குறைந்த தனி அடக்கச் செலவில் பொருளுற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பதே பன்னாட்டு வாணிகம் நடைபெறுவதற்கான அடிப்படையாகும். இரண்டு நாடுகள் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடுகிறது என எடுத்துக் கொள்வோம். அதில் ஒரு நாடு ஒரு பொருளை

12-Economics-Tamil-Chapter_7.indd 150 2/6/2020 12:19:53 PM

குறைந்த தனி அடக்கச் செலவில் உற்பத்தி செய்யும் சிறப்பு தேர்ச்சியை பெற்றுள்ளது. மற்றொரு நாடு வேறு பொருளை குறைந்த தனி அடக்கச் செலவில் உற்பத்தி செய்யும் தேர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்த இரு நாடுகளும் பொருட்களை பன்னாட்டு வாணிகத்தில் பரிவர்த்தனை செய்து கொண்டால் இரண்டு நாடுகளுக்கும் நல்ல பலன் கிடைக்கும்.

எடுகோள்கள்

1. இரண்டு நாடுகள் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றன (2 ×2 மாதிரி).

2. உழைப்பு மட்டுமே உற்பத்தியில் பயன்படுத்தப்படும் ஒரே உற்பத்தி காரணி.

3. எல்லா உழைப்பாளர்களும் ஒரே மாதிரியான இயல்புடையவர்கள்.

4. ஒரு பொருளின் செலவு அல்லது விலை அந்த பொருளை உற்பத்தி செய்ய தேவைப்படும் உழைப்பின் அளவைக் கொண்டே மதிப்பிடப்படுகிறது.

5. போக்குவரத்து செலவு இல்லை.

எடுத்துக்காட்டு விளக்கம்

முழுச் செலவுக் கோட்பாட்டை கீழ்கண்ட அட்டவணையின் மூலமாக எளிதாக விளக்கலாம்.

முழுச் செலவு

நாடு	இந்தியா	சீனா
	(தொழிலாளரின் தலா உற்பத்தி)	
கோதுமை	20	8
துணி	6	14



படம் 7.1

இந்தியா கோதுமையை சீனாவைவிட குறைந்த அடக்க செலவில் உற்பத்தி செய்யும் திறன் பெற்றுள்ளது என்பது மேற்கண்ட உதாரணத்திலிருந்து தெளிவாகிறது. சீனா துணியை இந்தியாவைவிட குறைந்த செலவில் உற்பத்தி செய்யும் திறன் பெற்றுள்ளதும் தெளிவாகிறது. எனவே, இந்தியா கோதுமையை உபரியாக உற்பத்தி செய்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். சீனாவிலிருந்து துணியை இறக்குமதி செய்து கொள்ளலாம். சீனா இந்திய கோதுமையை வாங்கிக்கொண்டு துணியை இந்தியாவுக்கு விற்கும். இவ்வகையான பன்னாட்டு வாணிகத்தில் இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளுக்கும் நன்மை உண்டாகும்.

7.5.3. ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவுக் கோட்பாடு

டேவிட் ரிக்கார்டோ இங்கிலாந்து நாட்டை சேர்ந்த பொருளியல் அறிஞர். தன் "அரசியல் பொருளாதாரம் மற்றும் வரி விதித்தலின் கோட்பாடுகள்" என்ற புத்தகத்தை 1817 ல் வெளியிட்டார். இதில் ஒப்புமைச் செலவு கோட்பாட்டை விளக்கி எழுதியுள்ளார். இதற்கு பிறகு ஜே.எஸ்.மில், மார்ஷல், டசிக் மற்றும் பலர் இக்கோட்பாட்டை மெருகேற்றினர்.

ரிக்கார்டோ பொருட்களை உற்பத்தி செய்ய செலவழிக்கப்படும் செலவு

12-Economics-Tamil-Chapter_7.indd 151 2/6/2020 12:19:53 PM

வேறுபாட்டை பன்னாட்டு வாணிபத்திற்கான அடிப்படை என்கிறார். ஒரு நாடு உற்பத்தி செய்யும் பொருட்களுக்கிடையே தனி அடக்க செலவில் வேறுபாடில்லை என்றாலும் ஒப்புமை செலவு வேறுபட்டிருக்கும். ஒரு நாடு குறைந்த ஒப்புமை செலவில் ஒரு பொருளை உற்பத்தி செய்யுமானால் அந்த நாடு பன்னாட்டு வாணிபத்தின் மூலம் பலனடைய முடியும் என்கிறார்.

ரிக்கார்டோ இரண்டு பொருட்களை ஒரு நாடு குறைந்த தனி அடக்க செலவில் உற்பத்தி செய்ய முடிந்தாலும் அந்த நாடு மற்ற நாட்டு உற்பத்தி செலவுடன் ஒப்பிட்டு குறைந்த செலவில் உற்பத்தி செய்ய இயலும் பொருளுற்பத்தியில் தனித் தேர்ச்சி அடைந்து ஏற்றுமதி செய்யலாம். இதே போன்று, எந்த பொருளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய இயலாத நாடு மற்ற நாட்டின் பொருளுற்பத்தி செலவுடன் ஒப்பிட்டு மிக உயர்வான உற்பத்தி செலவுள்ள பொருள் உற்பத்தியை நிறுத்திவிட்டு அவற்றை இறக்குமதி செய்து பலனடையலாம்.

எடுகோள்கள்

1. இரண்டு நாடுகள் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றன. (2 ×2 மாதிரி)
2. கூலிச் செலவு மட்டுமே உற்பத்தி செலவாகும்.
3 உழைப்பாளர்களனைவரும் சமமான திறன் பெற்றவர்கள்.
4. உழைப்பு ஒரு நாட்டுக்குள் இடம்பெயர தக்கது. நாடுகளுக்கிடையே இடம் பெயர இயலாதது.
5. உற்பத்தியளவு மாறா விளைவு விதிக்குட்பட்டது.
6. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தின் மீது தடைகளை விதிப்பதில்லை.
7. உற்பத்தி தொழில் நுட்பத்தில் மாற்றங்கள் நிகழ்வதில்லை.
8. போக்குவரத்து செலவு கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை.
9 நாட்டின் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.
10. உற்பத்தி வளங்கள் முழுவதும் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றன.
11. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடுவதில்லை.

எடுத்துக்காட்டு விளக்கம்

ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவு கோட்பாட்டினை அமெரிக்காவும் இந்தியாவின் துணி மற்றும் கோதுமை உற்பத்தி செலவுகளை கற்பனை உதாரணங்களாக கொண்டு புரிந்து கொள்ளலாம்.

ஒப்புமைச் செலவு

(ஒரு அலகு உற்பத்தி செய்ய தேவைப்படும் உழைப்பின் அளவு)

நாடு	துணி	கோதுமை	உள்நாட்டு பரிமாற்ற விகிதம்
அமெரிக்கா	100	120	1 மூட்டைகோதுமை = 1.2 மீட்டர் துணி
இந்தியா	90	80	1 மூட்டைகோதுமை = 0.88 மீட்டர் துணி



வரைபடம் 7.2

குறிப்பு: வளைகோட்டின் சாய்வுகள் வேறுபாடனவை

12-Economics-Tamil-Chapter_7.indd 152 2/6/2020 12:19:53 PM

அமெரிக்காவுக்கு துணி மற்றும் கோதுமை இரு பண்ட உற்பத்தியிலும் முழுப் பயன்பாட்டுத் தேர்ச்சி இருப்பது மேற்கண்ட உதாரணத்திலிருந்து தெளிவாகிறது, இந்தியா அமெரிக்காவிற்கு கோதுமையை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்து வாணிகத்தின் பலனை பெறலாம். இருப்பினும் அமெரிக்காவிற்கு கோதுமை உற்பத்தியில் ஒப்பீட்டு செலவு சாதகமாக உள்ளது. (80 / 120 < 90 / 100) இந்தியாவிற்கு துணி உற்பத்தியில் ஒப்புமைச் செலவு பாதகம் குறைவாக உள்ளது. கோதுமை, துணி உற்பத்தியில் இந்தியாவிற்கு பாதகம் குறைவாக இருப்பதால் இந்தியா துணி உற்பத்தியில் தேர்ச்சி பெற்று அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்து கோதுமையை இறக்குமதி செய்யதுகொள்ளலாம். பன்னாட்டு வாணிகத்தில் பண்ட பரிமாற்ற விகிதம் 0.88 லிருந்து 1.2 அலகு வரை துணி ஒரு அலகு கோதுமையாக இருந்தால் இரு நாடுகளும் நன்மை பெறும். பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடாமல் இந்தியாவும் அமெரிக்காவும் துணி மற்றும் கோதுமையை அவரவர்களே உற்பத்தி செய்ய இந்தியா 170 அலகு உழைப்பையும் அமெரிக்கா 220 அலகு உழைப்பையும் பயன்படுத்த வேண்டிவரும். மாறாக, பன்னாட்டு வாணிகத்தை அனுமதித்தால் 80 அலகு உழைப்பளவைக் கொண்டு உற்பத்தி செய்த ஒரு மூட்டை கோதுமையை அமெரிக்காவிடம் கொடுத்து 90 அலகு உழைப்பு தேவைப்படுகிற ஒரு மீட்டர் துணியை வாங்கிவிட முடியும். ஆக இந்தியா 160 அலகு மட்டுமே உழைப்பைப் பயன்படுத்தி இரண்டு மூட்டை கோதுமையை உற்பத்தி செய்து அதில் ஒரு மூட்டை கோதுமையை அமெரிக்காவிடம் ஒரு மீட்டர் துணியை பரிமாறிக்கொள்ளலாம். இதுவே பன்னாட்டு வாணிபத்தால் இந்தியாவுக்கு கிடைக்கும் பலனாகும். பத்து அலகு உழைப்பு மிச்சப்படுவதே பன்னாட்டு வாணிகத்தின் பலன் என்கிறார் ரிக்கார்டோ, இதே போன்று 200 அலகு உழைப்பை மட்டுமே உற்பத்தியில் ஈடுபடுத்தி அமெரிக்கா துணி ஒரு மீட்டர் மற்றும் கோதுமை ஒரு மூட்டையை பெறமுடியும். துணி ஒரு மீட்டர் கோதுமை ஒரு மூட்டை உற்பத்தி செய்தால் 220 அலகு உழைப்பு தேவைப்படும். அமெரிக்காவுக்கு 20 அலகு உழைப்பு மிச்சப்படுவதையே பன்னாட்டு வாணிகத்தின் பலன் எனலாம்.

திறனாய்வு

1. உழைப்பு செலவு உற்பத்தி செலவில் ஒரு பகுதிதான். எனவே, உழைப்பு செலவு அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள கோட்பாடு உண்மையை பிரதிபலிக்கவில்லை.

2. பல்வேறு நாட்டுத் தொழிலாளிகள் ஒரே அளவு திறன் பெற்றவர்களல்லர்.

7.5.4. புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு

அறிமுகம்

சுவீடன் நாட்டு பொருளியல் அறிஞர் இலி ஹெக்சர் 1919ல் ஒரு பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டை விளக்கினார். அந்த கோட்பாட்டை மேலும் விளக்கங்களை கொடுத்து ஹெக்சரின் மாணவரான பெர்டில் ஒலின் விரிவுபடுத்தினார். இந்த கோட்பாடு ரிக்கார்டோவின் கோட்பாட்டின் விரிவாக்கமாகவும் அமைந்தது. நாடுகளுக்கிடையே உற்பத்தி வளங்களின் அளிப்பு அளவில் நிலவும் வேறுபாடே பன்னாட்டு வாணிகத்துக்கான காரணம் என்ற இலி ஹெக்சரின் உற்பத்தி வள வேறுபாடு கோட்பாட்டை புதிய பன்னாட்டு வாணிக கோட்பாடு என்றழைக்கிறோம்.

12-Economics-Tamil-Chapter_7.indd 153 2/6/2020 12:19:53 PM

காரணி இருப்பு மாதிரி

- ஹெக்செர், ஒலின் உருவாக்கினார்
- அதிகமான காரணி இருப்புகளைக் கொண்ட நாடுகள் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று வாணிபத்தில் ஈடுபடலாம்
- திறன் உழைப்பின் இருப்பு → சிறப்புத் தேர்ச்சி → ஏற்றுமதி

→ திறனற்ற உழைப்பு கொண்ட நாடுகளால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகளுக்குப் பரிமாற்றம் செய்தல்

- ஏற்றுமதிகள் இருப்பு அதிகமாக உள்ள காரணியுடன் தொடர்புடையது
- இறக்குமதிகள் பற்றாக்குறையான காரணியுடன் தொடர்புடையது.
- அதிக காரணிப் பெயர்வு என்பதை எடுகோளாகக் கொள்கிறது

கோட்பாடு

ஒப்புமைச் செலவு வேறுபாடே பன்னாட்டு வாணிகத்திற்கான காரணம் என தொன்மைப் கோட்பாடுகளில் காணப்படுகிறது. மேலும் தொன்மை கோட்பாடு உழைப்பை மட்டுமே உற்பத்தி காரணியாக கருதுகிறது. ஆனால் புதிய வாணிகக் கோட்பாடு ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கான காரணங்களை விளக்குகிறது. கீழ்கண்ட இரண்டு காரணங்களால் நாடுகளுக்கிடையே ஒப்புமைச் செலவு வேறுபடுகின்றது.

i) நாடுகள் பெற்றுள்ள உற்பத்தி காரணிகள் அளவு வேறுபடுகிறது.

ii) உற்பத்திக்குத் தேவைப்படும் உற்பத்தி காரணிகளின் விகிதமும் வேறுபடுகிறது.

எடுகோள்கள்

1. இரண்டு நாடுகள் இரண்டு உற்பத்தி காரணிகளை பயன்படுத்தி இரண்டு விதமான பொருட்களை உற்பத்தி செய்கிறது (2X2X2 மாதிரி).
2. நாடுகள் வெவ்வேறு அளவுகளில் உற்பத்தி காரணிகளை பெற்றுள்ளது.
3. பொருட்கள் அவற்றின் உற்பத்தியில் உற்பத்தி காரணியின் தேவைப்படும் அளவு தீவிரத்தன்மையை பொறுத்து வகைப்படுத்தப்படுகிறது.
4. இரண்டு நாடுகளும் ஒரே விதமான உற்பத்தி தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன.
5. இரண்டு நாடுகளும் ஒரே இயல்பான தேவையை பெற்றுள்ளன.
6. இரண்டு நாட்டின் பொருள் மற்றும் உற்பத்தி காரணிகளுக்கான சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.

ஹெக்செர் – ஒலின் கோட்பாடு (H – O Theorem)

H – O கோட்பாடு

"மூலதன இருப்பை அதிகம் கொண்ட நாடு மூலதனப் பண்டங்களையும், உழைப்பு இருப்பை அதிகம் கொண்ட நாடு உழைப்பை அதிகம் பயன்படுத்தும் பண்டங்களையும் ஏற்றுமதி செய்யும்".

காரணி

காரணி விகிதங்களின் மாதிரி ஏற்றுமதி, இறக்குமதியை காரணி இருப்பு அளவுகளோடு தொடர்புபடுத்துகிறது.

ஏற்றுமதிகள்

ஒரு நாடு அது அதிகமாகக் கொண்டுள்ள காரணியைக் கொண்டு உற்பத்தி செய்யும் பண்டங்களை ஏற்றுமதி செய்யும்

12-Economics-Tamil-Chapter_7.indd 154 2/6/2020 12:19:53 PM

விளக்கம்

மூலதனம் மிகுதியாக உள்ள நாடு அதிக முதலீட்டில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்யும் உழைப்பாளர்கள் மிகுதியாக உள்ள நாடு அதிக உழைப்பினால் தயாரிக்கப்படும் பொருட்களை ஏற்றுமதி செய்யும் என ஹெக்சர் ஒலின் கூறுகிறார்கள். ஒரு உற்பத்தி காரணி மிகுதியாகச் கிடைக்கிறதா பற்றாக்குறையாக உள்ளதா என்பது மற்ற காரணிகள் கிடைக்கும் அளவைப் பொருத்தது. ஒரு நாட்டின் மூலதன அளவிற்கும் மற்ற உற்பத்தி காரணி அளவிற்குமான விகிதம் மற்ற நாடுகளின் விகிதத்தை விட அதிகமாக இருந்தால் அந்த நாட்டை மூலதனம் மிகுந்த நாடு எனக் கருதலாம்.

உதாரண விளக்கம்

விபரங்கள்	இந்தியா	அமெரிக்கா
உழைப்பின் அளிப்பு	50	24
மூலதனத்தின் அளிப்பு	40	30
மூலதன உழைப்பு விகிதம்	40/50 = 0.8	30/24 = 1.25

இந்தியா அதிக மூலதனம் உள்ள நாடு போன்று தோன்றினாலும் அமெரிக்காவே மூலதனம் மிகுந்த நாடாகும் என்பது அமெரிக்காவின் மூலதன உழைப்பு விகிதமான 1.25 இந்தியாவின் 0.8 விட அதிகமிருப்பதிலிருந்து புரிகிறது. கீழ்க்கண்ட வரைபடம் புதிய வாணிபக் கோட்பாட்டின்படி உலக வாணிகத்தில் பொருள் கலவை எப்படி இருக்கும் என விளக்குகிறது.

குறைபாடுகள்

1. நாடுகளில் உற்பத்தி காரணிகளின் இருப்பளவு காலத்திற்கேற்றாற் போல மாறலாம்.

2. உற்பத்திக் காரணிகளின் திறன் நாடுகளுக்கிடையே வேறுபடலாம். உழைப்பாளர்களின் எண்ணிக்கை கவனத்தில் எடுத்துக் கொண்டால் அமெரிக்கா உழைப்பாளர் பற்றாக்குறை உள்ள நாடு போன்று தோன்றும். ஆனால் உழைப்பாளர்களின் உற்பத்தி திறனை கணக்கிலெடுத்துக் கொண்டால் அமெரிக்கா உழைப்பாளர்கள் மிகுந்த நாடாகும்.

12-Economics-Tamil-Chapter_7.indd 155 2/6/2020 12:19:53 PM

7.5.5 தொன்மை மற்றும் புதிய கோட்பாடுகள் ஒப்பீடு

வ. எண்	தொன்மைப் பன்னாட்டு வாணிபக் கோட்பாடு	புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு
1.	பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதற்கு உழைப்பைச் சார்ந்த மதிப்புக்கோட்பாட்டைஅடிப்படையாகக் கொண்டது.	பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதற்கு பொது மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது
2.	இது ஒரு காரணி (உழைப்பு) மாதிரியாகும்	இது இரு காரணி (உழைப்பு, மூலதனம்) மாதிரியாகும்.
3.	ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தி திறன் வேறுபாடுகள் காரணம் என்கிறது	ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உற்பத்தி காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடே காரணம் என நம்புகிறது.

7.6 பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகள்

பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகளுக்கு அது பல ஆதாயங்களை வழங்குகிறது. ஒரு நாட்டில் உபரியாக உற்பத்தி செய்யப்படும் பொருள் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி ஆவதன் மூலம் பொருளுக்கான சந்தை விரிவடைகிறது. ஒரு நாட்டில் உற்பத்தியே செய்ய முடியாத பொருட்களையும் அதிக செலவில் உற்பத்தியாகும் பொருட்களையும் நாடுகள் மற்ற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்ய உதவுகிறது. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகள் கீழ்கண்ட நான்கு இனங்களின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.

I. திறனுடைய உற்பத்தி

பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளும் முழு அல்லது ஒப்பிட்டுத் தனிதேர்ச்சி கிடைப்பதனால் கீழ்கண்ட நன்மைகளைப் பெறுகின்றன.

1. உற்பத்தி வளங்களை சிறப்பாக பயன்படுத்துதல்
2. ஒப்பிட்டுத் தனித் தேர்ச்சியுள்ள பொருளுற்பத்தியில் கவனம் செலுத்துதல்
3. உழைப்பு விரயம் தவிர்த்தல்
4. உற்பத்தி திறன் மேம்படுதல்
5. உற்பத்தி தொழில் நுட்பம் மேம்படுதல்
6. உற்பத்தி அளவு அதிகரித்தல்
7. பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

II. நாடுகளிடையே விலை சமனடைதல்

பன்னாட்டு வாணிகம் அனைத்து வணிக நாடுகளிலும் சமநிலை நிலவ உதவுகிறது.

1. பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகளில் விலை சமமாகும்.
2. போக்குவரத்து செலவில் மட்டும் வேறுபாடு காணப்படும்.
3. உற்பத்தி காரணிகளின் விலையும் நாடுகளிடையே சமமாகும்.

12-Economics-Tamil-Chapter_7.indd 156 2/6/2020 12:19:53 PM

III. பற்றாக்குறையுள்ள வளங்களை சமமாகப் பகிர்தல்

பன்னாட்டு வாணிகம் பற்றாகுறையான வளங்களை சமமாக பகிர்ந்து கொள்ள உதவுகிறது.

IV. பன்னாட்டு வாணிகத்தின் பொதுவான நன்மைகள்

1. மக்கள் வாங்கி பயன்படுத்த பலவகையான பொருட்கள் கிடைக்க வழி வகுக்கிறது
2. வேலைவாய்ப்பு அதிகரிக்கச் செய்கிறது
3. பின்தங்கிய நாடுகள் தொழில்மயமாகலாம்.
4. நாடுகளுக்கிடையேயான உறவு மேம்பட வாய்ப்புள்ளது.
5. உழைப்பு பகுப்பு மற்றும் பொருள் உற்பத்தியில் தனிதேர்ச்சியடைதலுக்கு உதவுகிறது.
6. போக்கு வரத்து வசதிகள் வளரும்.

7.7 வாணிப வீதம்

பன்னாட்டு வாணிக முறையின் இலாபம் என்பது வாணிப வீதத்தை பொறுத்தும், ஏற்றுமதி, இறக்குமதி விலை வீதத்தை பொறுத்தும் அமையும்.

$$\text{வாணிப வீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைக்குறியீடு}}{\text{இறக்குமதி விலைக் குறியீடு}} \times 100$$

7.7.1 வாணிப வீதம் – பொருள்

பன்னாட்டு வாணிகத்தினால் கிடைக்கும் நன்மைகள் வாணிப வீதத்தை சார்ந்திருக்கும். ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்குமிடையான விகிதமே வாணிப வீதம் எனலாம். ஏற்றுமதியாகும் பொருட்களின் சராசரி விலை இறக்குமதியாகும் பொருட்களின் சராசரி விலையைவிட அதிகமாகும் பொழுது நாடுகளின் வாணிப வீதம் மேம்பாடடையும்.

7.7.2 வாணிப வீதத்தின் வகைகள்

ஜெரால்ட் எம். மெய்யர் வாணிப வீதத்தை மூன்றாக வகைப்படுத்துகிறார்:

பொருட்கள் பரிவர்த்தனை விகித அடிப்படையிலான வாணிப வீத வகைகள் மூன்றினை கீழே காணலாம்.

வாணிப வீதம்
- நிகரபண்டமாற்று வாணிப வீதம் – தாசிக்
- மொத்த பண்டமாற்று வாணிப வீதம் – தாசிக்
- வருவாய் வாணிப வீதம் – ஜி. எஸ்.டோரான்ஸ்

1. நிகர பண்டமாற்றுவாணிப வீதம்

நிகர பண்டமாற்று வீதத்தை எப்.டபில்யூ தாசிக் 1927 ல் வடிவமைத்தார். ஏற்றுமதி விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்குடையிலான விகிதமே நிகர பண்டமாற்று வாணிப வீதம் என்கிறார். ஜேக்கப் வைனர் இதை பொருள் வாணிபவீதம் என்றழைக்கிறார். இதனை கீழ்கண்டவாறு குறிப்பிடலாம்.

$$T_n = (P_x / P_m) \times 100$$

இங்கு T_n = நிகர பண்டமாற்று வாணிப வீதம்

P_x = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

P_m = இறக்குமதி விலைக் குறியீட்டெண்

பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளை அளவிட இந்த வீதம் பயன்படுகிறது. நிகர பண்டமாற்று வாணிப வீத (T_n)மதிப்பு ஒரு நாட்டிற்கு கணக்கிடும் பொழுது 100விட அதிகமிருந்தால் அந்நாட்டின் வாணிப வீதம் சாதகமாக உள்ளதாகக் கருதலாம். இதில் ஒவ்வொரு ரூபாய் ஏற்றுமதிக்கும் ஒரு ரூபாயிக்கும் அதிமான மதிப்புள்ள பொருட்களை அந்த நாடு இறக்குமதி செய்ய முடியும் என புரிந்து கொள்ளலாம்.

2. மொத்த பண்டமாற்று வாணிப வீதம்

இந்த வீதத்தையும் தாசிக் என்பவரே 1927ல் அறிமுகப்படுத்தினார். நிகர பண்டமாற்று வீதத்தை மேம்படுத்தி இதை வடிவமைத்தார். மொத்த ஏற்றுமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்கும் மொத்த இறக்குமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்குமிடையிலான விகிதத்தை 100 ஆல் பெருக்கக் கிடைக்கும் தொகையாக மொத்த பண்டமாற்று வாணிப வீதத்தை புரிந்து கொள்ளலாம்.

இதனை சூத்திர வடிவில் கீழ்கண்டவாறு எழுதலாம்.

$$T_g = (Q_x/Q_m) \times 100$$

இங்கு T_g = மொத்த பண்டமாற்று வாணிப வீதம்

Q_m = இறக்குமதி அளவு குறியீட்டெண்

Q_x = ஏற்றுமதி அளவு குறியீட்டெண்

ஒரு குறிப்பிட்ட அளவு ஏற்றுமதி செய்யும் நாடு எந்த அளவு பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளலாம் என மொத்த பண்டமாற்று வாணிப வீதம் சுட்டிக் காட்டுகிறது

3. வருவாய் வாணிப வீதம்

வருவாய் வாணிப வீத கருத்தை ஜி. எஸ்.டோரான்ஸ் என்பவர் 1948ல் உருவாக்கினார். ஏற்றுமதி விலை குறியீட்டெண்ணை இறக்குமதி விலை குறியீட்டென்னால் வகுத்து வரும் ஈவுத் தொகையை ஏற்றுமதி அளவு குறியீட்டெண்னால் பெருக்க கிடைக்கும் தொகையே வருவாய் வாணிப வீதமாகும். நிகர பண்டமாற்று வாணிப வீதத்தை ஏற்றுமதி அளவுக் குறியீட்டெண்னால் பெருக்கியும் வருவாய் வாணிப வீதம் கணக்கிட முடியும் என்பது கவனிக்கத்தக்கது.

$$T_y = (P_x / P_m)Q_x$$

இங்கு,

T_y = வருவாய் வாணிப வீதம்

P_x = ஏற்றுமதி விலை அளவு குறியீட்டெண்

P_m = இறக்குமதி விலை அளவு குறியீட்டெண்

Q_x = ஏற்றுமதி அளவு குறியீட்டெண்

7.7.3. உற்பத்தி காரணிகள் பரிமாற்றம் அடிப்படையிலான வாணிப வீத வகைகள்

உற்பத்திக் காரணிகள் பரிமாற்றத்தின் அடிப்படையில் இரண்டு வகையான வாணிப வீதங்கள் உள்ளன. அவை இரண்டும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. ஒற்றைக் காரணி வாணிப வீதம்

ஜேக்கப் வைனர் ஒற்றைக்காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தார். பண்ட பரிமாற்ற வாணிப வீதத்தை விரிவுபடுத்தி இந்த வாணிப வீத சூத்திரத்தை உருவாக்கினார். ஏற்றுமதி விலை குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதி விலைக்

12-Economics-Tamil-Chapter_7.indd 158 2/6/2020 12:19:54 PM

குறியீட்டெண்ணுக்குமிடையேயான விகிதத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்தி தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண்ணின் மதிப்பினால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே ஒற்றைக்காரணி வாணிப வீதமாகும். இதனை சூத்திர வடிவில் கீழ்கண்டவாறு குறிப்பிடலாம்.

$$T_f = (P_x / P_m)\ F_x$$

இங்கு T_f = ஒற்றைக் காரணி வாணிப வீதம்

P_x = ஏற்றுமதி விலை குறியீட்டெண்

P_m = இறக்குமதி விலை குறியீட்டெண்

F_x = ஏற்றுமதிக்கு பொருள் உற்பத்தி செய்யும் தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மொத்த எண்ணிக்கையை இந்தகாரணிகளுக்கு செய்த மொத்த செலவால் வகுத்துப் பெறுவதே உற்பத்தித் திறன் குறியீடு.

2. இரட்டைக் காரணி வாணிப வீதம்

இந்த வீதத்தையும் வைனரே வடிவமைத்தார். இதன் சூத்திர வடிவம் கீழ்வருமாறு

$$T_{ff} = (P_x / P_m)\ \ (F_x / F_m)$$

இங்கு T_{ff} = இரட்டைக் காரணி வாணிப வீதம்

P_x = ஏற்றுமதி விலை குறியீட்டெண்

P_m = இறக்குமதி விலை குறியீட்டெண்

F_x = ஏற்றுமதி பொருள் உற்பத்தி தொழில் உற்பத்தி திறன் குறியீட்டெண்

F_m = இறக்குமதி பொருள் உற்பத்தி செய்யும் நாட்டில் அத்துறையின் உற்பத்திதிறன் குறியீட்டெண் .

7.8 வாணிபக் கொடுப்பல் நிலையும் அயல்நாட்டு செலுத்துநிலையும்

வாணிபக் கொடுப்பல் நிலையும் அயல்நாட்டு செலுத்தல் நிலையும் பன்னாட்டு வாணிபத்தின் இரண்டு பிரதான கருத்துக்களாகும். இவை, இரண்டையும் தெளிவாக புரிந்து கொண்டால் பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படை சிக்கல்களை எளிதாக புரிந்து கொள்ளலாம்.

7.8.1 வாணிபக் கொடுப்பல் நிலை (BOT)

ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பையே வாணிபக் கொடுப்பல் நிலை என்கிறோம். ஒரு நாட்டின் வாணிபக் கொடுப்பல்நிலை அறிக்கையில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரங்கள் மட்டுமே தொகுத்தளிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதியை "புலப்படும் வாணிகம்" எனவும் அழைக்கலாம் ஏனென்றால் பொருட்களை கண்ணால் காணவும் தொட்டுணரவும் முடியும்.



12-Economics-Tamil-Chapter_7.indd 159
2/6/2020 12:19:54 PM

சாதகமான வாணிபக் கொடுப்பல் நிலை

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நாட்டின் பண்ட ஏற்றுமதியின் மொத்த மதிப்பு இறக்குமதியின் மொத்த மதிப்பை விட அதிகமாக இருந்தால் அந்த நாடு சாதகமான வாணிபக் கொடுப்பல் நிலை பெற்றிருப்பதாக கருதலாம்.

பாதகமான வாணிபக் கொடுப்பல் நிலை

ஒரு நாட்டின் பண்ட ஏற்றுமதியின் மொத்த மதிப்பு பண்ட இறக்குமதியின் மொத்த மதிப்பைவிட குறைவாக இருந்தால் அந்த நாடு பாதகமான வாணிபக் கொடுப்பல் நிலையை பெற்றிருப்பதாகக் கூறலாம்.

7.8.2 அயல் நாட்டு செலுத்து நிலை (BOP)

நாடுகளுக்கிடையே பொருட்கள் மட்டுமல்லாமல் பணிகள், மூலதனம் பணம் போன்றவையும் பரிமாறிக்கொள்ளப்படுகிறது. இவற்றையும் உள்ளடக்கிய சமநிலையை ஒரு நாடு அடைய வேண்டும். இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய தொகுப்பு அறிக்கையே அயல்நாட்டுச் செலுத்துநிலை.

அயல்நாட்டு செலுத்துநிலை

அயல் நாட்டுச் செலுத்துநிலை பொருள் விளக்கம்

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துநிலை என்கிறோம். இது இரட்டைப் பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும்.

உலக நாடுகளிலிருந்து பெறப்படும் கட்டனத் தொகைகளை வரவு பரிவர்த்தனையாகவும் மற்ற நாடுகளுக்கு செலுத்த வேண்டிய செலவுத் தொகைகளை பற்று பரிவர்த்தனையாகவும் பதிவு செய்யப்படுகிறது. பண்டம் மற்றும் பணிகளின் ஏற்றுமதி, ஒரு நாட்டின் தொழிலாளர்கள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் தொகை, வெளிநாட்டுக் கடன், அந்நிய மூலதனம் மற்றும் தங்கம் உள்ளிட்ட அந்நிய செலாவணி விற்பனையில் கிடைக்கும் வருவாய் போன்றவை பிரதான வரவினங்களாகும்.

பொருட்கள் மற்றும் பணிகள் இறக்குமதி, நாட்டில் வாழும் வெளிநாட்டினர் அவர்கள் தாய்நாட்டிற்கு அனுப்பும் தொகை, வெளிநாடுகளுக்கு கடன் கொடுத்தல், வெளிநாடுகளில் முதலீடு செய்தல் மற்றும் தங்கம் உள்ளிட்ட அந்நிய செலாவணிகளை வாங்குதல் ஆகியவை பற்று பரிவர்த்தனையாக பதியப்படும் பிரதான செலவினங்களாகும்.

7.8.3. அயல்நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகள்

வரவு மற்றும் பற்று இனங்கள் நேர்க்கிடையாக அயல்நாட்டுச் செலுத்துநிலை அறிக்கையில் பதியப்படுகிறது. அவை படுக்கைகிடைமட்டமாக கீழ்கண்ட மூன்று இனங்களாக வகைப்படுத்தப்படுகிறது.

12-Economics-Tamil-Chapter_7.indd 160 2/6/2020 12:19:54 PM

அ. நடப்பு கணக்கு

ஆ. மூலதன கணக்கு

இ. மைய வங்கி தீர்வு கணக்கு அல்லது மைய வங்கி நிதி சொத்து கையிருப்பு கணக்கு

அ. நடப்பு கணக்கு: பன்னாட்டு பண்ட பரிவர்த்தனைகள், பன்னாட்டுப் பணி பரிவர்த்தனைகள், உற்பத்திக்காரணி வருவாய் மற்றும் பரிசுத் தொகை பரிவர்த்தனைகள் இந்த கணக்கின் கீழ் பதியப்படுகிறது.

ஆ. மூலதன கணக்கு: வெளிநாட்டுக் கடன், அந்நிய முதலீடு, பன்னாட்டு பண மற்றும் நிதி சந்தை விற்றல் வாங்கல் பரிவர்த்தனைகள் இந்த கணக்கின் கீழ் பதிவு செய்யப்படுகிறது.

இ. மைய வங்கி நிதி சொத்து கையிருப்புக் கணக்கு: மைய வங்கியின் கையிருப்பில் உள்ள செலவானி சொத்துக்களில் நடைபெறும் பரிவர்த்தனை இந்த கணக்கில் பதிவு செய்யப்படுகிறது. நடப்பு மற்றும் மூலதன கணக்கில் உபரி எழுந்தால் கையிருப்புக் கணக்கில் சேர்க்கப்படும். பற்றாக்குறை விழுந்தால் கையிருப்பிலிருந்து எடுத்து செலவிடப்படும். எனவேதான் இதற்கு மைய வங்கி கையிருப்பு தீர்வு கணக்கு என்ற பெயரும் வழங்கப்பட்டது. இந்த கணக்கின் கீழ் தங்கத்தின் இருப்பு, எளிதாக மற்ற நாட்டு பணமாக மாற்றத்தக்க வெளிநாட்டு பணம், சிறப்பு எடுப்புரிமை (பன்னாட்டு பண நிதியத்தின் பணம்) மற்றும் பன்னாட்டுப் பண நிதியத்தின் நிகர கடன் பெறும் தகுதி நிலை ஆகியவை பதிவு செய்யப்படுகிறது.

அயல்நாட்டுச் செலுத்துநிலைச் கணக்கு வரைபடம்

வரவு (வருவாய்) – பற்று (செலவு) = நிகரநிலை [பற்றாக்குறை (–), உபரி (+)]

பற்றாக்குறை (செலவு > வருவாய்)

7.8.4. அயல்நாட்டுச் செலுத்துநிலையின் சமனற்ற நிலை

ஒரு நாட்டின் பன்னாட்டு வரவும் (R) செலவும் (P) சமமாக இருந்தால் அந்நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையிலிருக்கும். குறியீடுகளில் இதை எனலாம்.

R / P =1.

வாணிபச் செலுத்துச் சமநிலையற்ற நிலை

கீழ்வரும் நிலையில் தோன்றும்

தேவை ≠ அளிப்பு

வரவு > பற்று → பற்றாக்குறை

சமனற்ற நிலை

சாதகமான அயல்நாட்டுச் செலுத்துநிலை

ஒரு நாட்டின் பன்னாட்டு வரவு பன்னாட்டு செலவைவிட பெரிதாக இருந்தால் அந்நாட்டிற்கு அயல்நாட்டுச் செலுத்துநிலை சாதகமாக அமையும். இதை குறியீடுகளில்

R / P > 1.

என குறிப்பிடலாம்.

பாதகமான அயல்நாட்டுச் செலத்துநிலை

பன்னாட்டு வரவு செலவைவிட குறைவாக இருந்தால் அந்த நாட்டிற்கு அயல்நாட்டுச் செலுத்துநிலை பாதகமாகிவிடும். குறியீடுகளில்

R / P < 1.

என எழுதலாம்.

12-Economics-Tamil-Chapter_7.indd 161 2/6/2020 12:19:54 PM

7.8.5. அயல்நாட்டுச் செலுத்துநிலை சமனற்ற நிலையின் வகைகள்

அயல்நாட்டுச் செலுத்து சமனற்ற நிலையின் மூன்று வகைகளை கீழ்கண்டவாறு புரிந்துக் கொள்ளலாம்.

அ) சுழற்சி சமனற்ற நிலை

ஆ) நீண்டகால சமனற்ற நிலை

இ) கட்டமைப்பு சமனற்ற நிலை

அ) சுழற்சி சமனற்றநிலை

வாணிப சுழற்சியின் விளைவாக எழும் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையை சுழற்சி சமனற்றநிலை என்கிறோம். கீழ்கண்ட இரண்டு காரணங்களால் இது நிகழ்கிறது முதலாவது, நாடுகள் வாணிப சுழற்சியின் வெவ்வேறு கட்டங்களிலிருப்பது இரண்டாவது, நாடுகளுக்கிடையே தேவை நெகிழ்வு அளவு மாறுபடுவது

ஆ) நீண்டகால சமனற்ற நிலை

நாடுகள் பொருளாதார வளர்ச்சி படிநிலைகளில் முன்னேறும்பொழுது நீண்டகால தலைகீழ் மாற்றங்கள் நிகழ்வதால் உண்டாகும். அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையை நீண்டகால சமனற்ற நிலை எனலாம். வளர்ச்சியின் துவக்கநிலையில் ஒரு நாட்டின் உள்நாட்டு முதலீடு உள்நாட்டு சேமிப்பைவிட கூடுதலாக இருக்கும். இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருக்கும். இந்தியாவில் 1951லிருந்தே இந்த சூழ்நிலை நிலவுகிறது.

இ) கட்டமைப்பு சமனற்ற நிலை

நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டு செலுத்துசமனற்ற நிலையே கட்டமைப்பு சமனற்ற நிலையாகும். மாற்று வழங்கல் ஆதாரங்களை கண்டுபிடித்தல், செயற்கையான பதிலீட்டுப் பொருட்களை கண்டுபிடித்தல், உற்பத்தி வளங்கள் தீர்ந்து போதல் அல்லது போக்குவரத்து வழிகளும் செலவும் மாற்றமடைதல் போன்றவையே பொருளாதார கட்டமைப்பு மாற்றம் என்கிறோம்.

7.8.6. அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மைக்கான காரணங்கள்

ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமனற்ற நிலைக்கான காரணங்களாவன

1. சுழற்சியான ஏற்ற இறக்கம்

நாடுகளின் வாணிப சுழற்சியின் ஏற்ற இறக்கம், அவற்றின் காலகட்டங்கள் மற்றும் அவை உருவாக்கும் மாற்றங்களின் அளவுகள் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையை உருவாக்குகிறது. மந்தகாலங்களில் பன்னாட்டு வாணிகம் வீழ்ச்சி அடைகிறது. செழிப்பான காலங்களில் வாணிகம் வளர்கிறது.

2. கட்டமைப்பு மாற்றங்கள்

வளரும் நாடுகளில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் அபரிமிதமான முதலீடும் கட்டமைப்பை மாற்றி அமைத்து அயல்நாட்டுச் செலுத்து சமனற்ற நிலையை உருவாக்குகிறது. வளரும் நாடுகள் தொழில் வளர்ச்சிக்காக அதிகப்படியான இறக்குமதி நாட்டம் கொண்டுள்ளது. ஆனால் இறக்குமதிக்கு ஈடாக ஏற்றுமதி செய்வதில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. மேம்பாட்டுச் செலவு

பொருளாதார மேம்பாட்டுக்காக அரசு செய்யும் செலவு வருமானத்தையும் விலையையும் அதிகரிக்க செய்கிறது. நாடுகள் வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில்

12-Economics-Tamil-Chapter_7.indd 162 2/6/2020 12:19:54 PM

தற்சாற்பற்றவையாக இருக்கும். மக்களின் வருமானம், சேமிப்பு மற்றும் முதலீடு மிகக் குறைவாக இருக்கும். பொருட்கள், மூலதனம் மற்றும் தொழில்நுட்பத்தை பெறுவதற்கு வளர்ந்த நாடுகளை நம்பி இருக்கும். ஏற்றுமதி வாய்ப்பு குறைவு அதே நேரத்தில் இறக்குமதி நாட்டம் அதிகம் எனவே வளரும் நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமனற்றநிலையிலேயே உள்ளது.

4. மிகை நுகர்வுப்போக்கு

ஆடம்பர பொருட்கள் மீதான பேராசை அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பாதகமான விளைவுகளை உண்டாக்குகிறது ஏனென்றால் மிகை நுகர்வுப்போக்கு இறக்குமதியை அதிகப்படுத்தி ஏற்றுமதித் திறனை குறைத்து விடுகிறது.

5. வெளிக்காட்டும் விளைவு

மற்றவர் ஒரு பொருளை பயன்படுத்தும் காட்சியைப் பார்க்கும் ஒருவர் அந்தப் பொருளை தானும் பயன்படுத்த வேண்டும் என விருப்பம் கொள்வதே வெளிகாட்டும் விளைவு. விளம்பரங்கள் மற்றும் திரைப்படங்கள் இவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தி வளர்ந்த நாடுகளின் பொருட்களை வளரும் நாட்டு நுகர்வோரை வாங்கவைத்துவிடுகிறது. இதன் விளைவாக வளரும் நாடுகளின் இறக்குமதி நாட்டம் அதிகரித்து அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பற்றாக்குறை உண்டாகிறது.

6. வெளிநாட்டில் கடன் வாங்குதல்

வெளிநாட்டில் கடன் வாங்கினால் வாங்கும் ஆண்டில் அயல்நாட்டு செலுத்துநிலையில் உபரியும் வட்டியுடன் திரும்ப செலுத்தும் காலங்களில் பற்றாக்குறை சமமின்மையும் ஏற்படும். இதே போன்று வெளிநாட்டு முதலீடு உள்வரும் ஆண்டில் உபரி சமமின்மையும் வெளிநாட்டிற்கு முதலீடு வெளிசெல்லும் ஆண்டுகளில் பற்றாக்குறை சமமின்மையும் உருவாகும்.

7. தொழில்நுட்பப் பின்னடைவு

உள்நாட்டுத் தொழில்நுட்பம் பின்தங்கியிருந்தால், புதிய தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து வாங்குவதால் அயல்நாட்டுச் செலுத்து நிலை சமனற்ற நிலையை அடைகிறது.

8. பன்னாட்டு அரசியல்

போர்க்கருவிகள் மற்றும் ஆயுதங்கள் உற்பத்தி செய்யும் நாடுகள், மற்ற நாடுகளுக்கிடையே நடைபெறும் போர்களைப் பயன்படுத்தி ஆயுதங்களை மற்ற நாடுகளுக்கு ஏராளமாக விற்பனை செய்கின்றன. போர்களில் வெற்றி பெற பின்தங்கிய நாடுகள் போர் கருவிகள் வாங்க தங்களது ஏற்றுமதி வருவாயை செலவிட்டு, வாணிப பற்றாக்குறையில் பிடிபடுகின்றன. அயல்நாட்டுச் செலுத்துநிலை பற்றாக்குறைச் சமமின்மைக்கு இது வழிவகுக்கிறது.

7.8.7. அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையை நீக்கும் வழிமுறைகள்

வாணிபச் செலுத்து சமநிலையற்ற நிலையைச் சரி செய்யும் நடவடிக்கைகள்

ஏற்றுமதி

- பணஅளிப்புச் சுருக்கம்
- பணமதிப்புக் குறைப்பு
- இறக்குமதி கட்டுப்பாடு
- ஏற்றுமதி ஊக்கம்
- செலாவணிக் கட்டுபாடுகள்
- இறக்குமதி பதிலீட்டுப் பண்டங்களை உற்பத்தி செய்தல்
- பணக்கொள்கை
- நிதிக் கொள்கை
- மூலதன இறக்குமதி

இறக்குமதி

அயல் நாட்டுச்செலுத்து சமமின்மையை நீக்குதல்

தானாக சரியாதல் நிலை

1. விலையை சரிசெய்தல்
2. வட்டிவீதம் சரிசெய்தல்
3. வருமானம் சரிசெய்தல்
4. மூலதனப் பெயர்வு

விரும்பி செயல்படுத்தப்படும் வழிமுறைகள்

பணவியல் வழிமுறைகள்

1. பண அளிப்பு சுருங்குதல்/விரிவடைதல்
2. பணமாற்று மதிப்பை குறைத்தல்/ பண மாற்றுபதிப்பை அதிகப்படுத்துதல்
3. செலாவணிக் கட்டுப்பாடு

இதர வழிமுறைகள்

1. வெளிநாட்டுக்கடன்
2. வெளிநாட்டு முலதன வருகையை ஊக்குவித்தல்
3. சுற்றுலா மேம்பாடு
4. வெளிநாடு வாழ்குடிமக்கள் பணம் அனுப்ப ஊக்குவித்தல்
5. இறக்குமதி பதிலீட்டு பொருள் உற்பத்தி

வாணிப வழிமுறைகள்

ஏற்றுமதி ஊக்குவித்தல்

1. ஏற்றுபதி தீர்வையை நீக்குதல்/ குறைத்தல்
2. ஏற்றுமதி மானியம்
3. ஏற்றுமதி ஊக்குவித்தல்

இறக்குமதி கட்டுப்பாடுகள்

1. இறக்குமதி தீர்வை
2. இறக்குமதி பங்களவு
3. இறக்குமதித் தடை

அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையை நீக்குவதற்கு இரண்டு வகையான வழிமுறைகள் உள்ளன. அவை (i) தானாக செயல்படும் வழிமுறைகள் மற்றும் (ii) விரும்பி செயல்படுத்தப்படும் வழிமுறைகள்

I தானாக சரியாதல்

சந்தை விசைகளான தேவையும் அளிப்பும் எந்தவித தலையீடுமின்றி அதிகரிக்க குறைய அனுமதித்தால் காலப்போக்கில் அயல்நாட்டு செலுத்துநிலை தானாக சமநிலையை அடையும் என நம்பப்படுகிறது. மாறுகின்ற அந்நிய செலாவணி மாற்றுவீத முறையில் அயல்நாட்டு செலுத்துநிலை விலை, வட்டி வீதம், வருமானம் மற்றும் மூலதன இடபெயர்வு போன்றவற்றில் நடக்கும் மாற்றங்களினால் சமனற்றநிலை தானாக சரியாகி சமநிலையை அடையும்.

1. விலையை சரிசெய்தல்

அயல்நாட்டு செலுத்து சமநிலை பற்றாக்குறையான நாடுகளிலிருந்து உபரி நாடுகளுக்கு அந்நிய செலாவனி வெளியேறுவதால் பற்றாக்குறை நாடுகளில் பண அளிப்பானது குறைகிறது. உபரி நாடுகளில் பண அளிப்பானது அதிகரிகிறது. இதன் விளைவாக விலையுயர்ந்து உபரி நாடுகள் இறக்குமதியை ஊக்குவிக்கிறது, எற்றுமதியை தவிர்க்கிறது. அதேசமயம் பற்றாக்குறை நாடுகளில் காணும் விலை வீழ்ச்சியானது எற்றுமதியை ஊக்குவிக்கிறது, இறக்குமதியை தவிர்க்கிறது. இவற்றின் மூலமாக அயல்நாட்டு செலுத்து சமநிலை நிலைப்படுத்தப்படுகிறது.

2. வட்டி வீதம் சரிசெய்தல்

அயல்நாட்டுச் செலுத்துநிலை பற்றாக்குறை நாட்டில் பண அளிப்பு குறைந்து

12-Economics-Tamil-Chapter_7.indd 164 2/6/2020 12:19:54 PM

வட்டி வீதம் உயரும். உபரி நாட்டில் பண அளிப்பு உயர்ந்து வட்டிவீதம் குறையும், உபரிநாட்டு வட்டிவீதம் குறைவினாலும். பற்றாக்குறை நாட்டு வட்டிவீத உயர்வினால் அந்நாட்டின் நிதி முதலீட்டாளர்கள் வெளிநாட்டு நிதி சந்தையிலிருந்து முதலீடுகளை திரும்ப பெற்று உள்நாட்டுக்குள் கொண்டு வருவார்கள் உபரி நாடுகளில் இது தலைகீழாக நடக்கும். விளைவாக இரு வகை நாடுகளிலும் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையை அடையும்.

3. வருமானம் சரிசெய்தல்

செலுத்துநிலை உபரிநாட்டின் வருமானம் உயரும். வருமானம் உயர்வு வெளிநாட்டு பொருட்களை வாங்கத் தூண்டும். இதனால் இறக்குமதி அதிகரித்து செலுத்துநிலை உபரி நீங்க சமநிலையை அடையும்.

4. மூலதனப் பெயர்வு

வெளிநாட்டு மூலதனத்தை வட்டிவீதத்தை உயர்த்தி கவர்ந்திழுக்க முடியும். செலுத்துநிலைப் பற்றாக்குறை நாடுகள் வட்டிவீதத்தை உயர்த்தி செலுத்துநிலை சமமின்மையை நீக்கலாம்.

II விரும்பி செயல்படுத்தப்படும் வழிமுறைகள்

விரும்பி செயல்படுத்தப்படும் வழிமுறைகளை மூன்று பிரிவாக வகைப்படுத்தலாம். அவையாவன: அ) பணவியல் வழிமுறைகள், ஆ) வாணிப வழிமுறைகள் மற்றும் இ) இதர வழிமுறைகள்

அ. பணவியல் வழிமுறைகள்

1. பண அளிப்பு சுருக்கம்

உள்நாட்டுப் பொருட்களின் விலை அதிகமாக இருந்தால் மலிவான வெளிநாட்டு பொருட்களை மக்கள் அதிகம் வாங்குவார்கள். இது இறக்குமதியை உயர்த்திவிடும். வெளிநாட்டினரோ அதிக விலையுள்ள பொருட்களை வாங்கமாட்டார்கள். இது ஏற்றுமதியைக் குறைத்துவிடும். நாட்டின் மைய வங்கி பண அளிப்பை கட்டுப்படுத்தி உள்நாட்டு பொருட்களின் விலையையும் கட்டுபடுத்தும் இதன் விளைவாக ஏற்றுமதி அதிகரித்து இறக்குமதி குறைந்து அயல்நாட்டுச் செலத்துநிலையின் சமமின்மை நீங்கும். மேலும், கடன் அளவு கட்டுக்குள் இருந்தாலும், முதலீடு குறையும், உற்பத்தியின் அளவு குறையும் விலை அதிகரிக்கும். இது 2010 – ல் அரசாங்கத்திற்கும் ரிசர்வ் வங்கிக்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்தியது.

2. பண மதிப்புக் குறைப்பு

ஒரு நாட்டின் மைய வங்கி அந்நாட்டின் பணத்தை மற்ற நாடுகளின் பண மதிப்பில் தானாக முன்வந்து குறைத்து நிர்ணயிப்பதே செலாவணி மதிப்பு குறைப்பு ஆகும். உதாரணமாக $1 = ₹70 என்ற பண மாற்று வீதத்தை $1 = ₹80 என்று குறைந்து நிர்ணயிப்பதை செலாவணி மதிப்பு குறைப்பு எனலாம்.

இந்தியாவில் செலாவணி மதிப்பு குறைப்பு நிகழ்வுகள்

இந்திய ரூபாய் 1947 லிருந்து மூன்று முறை

மதிப்பிறக்கம் செய்யப்பட்டது

1. செப்டம்பர் 29, 1949
2. ஜூன் 6, 1966
3. ஜூலை 1, 1991

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சமமின்மை உள்ள நாடு தன் பணத்தின் மதிப்பை குறைத்து நிர்ணயித்து ஏற்றுமதிக்கு ஊக்கம் கொடுத்து இறக்குமதிக்கான ஊக்கத்தை கெடுத்து செலுத்து சமமின்மையை சரிசெய்யலாம். செலாவணி மதிப்பு குறைப்பு ஏற்றுமதி பொருட்களை மலிவானதாகவும் இறக்குமதி பொருட்களை விலை உயர்ந்தவையாகவும் மாற்றும். பணமதிப்பிறக்கம் இந்திய உணவுப் பொருட்கள் வெளிநாட்டினருக்கு மலிவான

12-Economics-Tamil-Chapter_7.indd 165 2/6/2020 12:19:55 PM

விலையிலும் இந்தியர்களுக்கு வெளிநாட்டு பொருட்கள் உயர்ந்த விலையிலும் கிடைக்க செய்கிறது.

3. அந்நிய செலாவணிக் கட்டுப்பாடு

அந்நிய செலாவணி சந்தையில் அரசு தலையிடுவதையே செலாவணிக் கட்டுப்பாடு என்கிறோம். அயல்நாட்டுச் செலுத்துநிலை நிர்வகிக்க இது புகழ்வாய்ந்த நடைமுறையாகும். அந்நியச் செலாவணி ஈட்டுவதையும் இருப்பு வைப்பதையும் மைய வங்கி முழுமையாக தன்கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கிறது. ஏற்றுமதியாளர்கள் போன்ற அந்நிய செலாவணி ஈட்டுபவர்கள் அதை மைய வங்கியிடம் ஒப்படைத்து உள்நாட்டு பணமாக மாற்றி பெற்றுக் கொள்ள வேண்டும். இறக்குமதியாளர்களுக்கும் இம்மாதிரியான கட்டுப்பாடுகள் இருப்பதால் ஒரு நாடு இறக்குமதியையும் சிறப்பாக குறைக்க முடியும் கட்டுப்பாடுகள் பொருள் கடத்தலுக்கு வழிவகுக்கும் என்ற கருத்தும் உண்டு. பத்திரிக்கைகள் கருத்துபடி இந்திய விமானநிலையங்களில் தங்கம் கடத்தி வருதலை பிடிப்பது சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது.

III. வாணிப வழிமுறைகள்

ஏற்றுமதிக்கு ஊக்கமளித்து இறக்குமதியை குறைக்கும் வழிமுறைகளேயே வாணிப வழிமுறைகளாகும். அவற்றை இங்கே விவாதிக்கலாம்.

1. ஏற்றுமதி ஊக்கமளித்தல்

கீழே பட்டியலிடப்பட்டுள்ள வழிமுறைகளை செயல்படுத்தி ஏற்றுமதிக்கு ஊக்கமளிக்கலாம். i) ஏற்றுமதி மீது விதிக்கப்படும் சுங்க வரியை குறைத்தல் அல்லது நீக்குதல் ii) ஏற்றுமதி மானியம் வழங்குதல் iii) ஏற்றுமதிக்காக உற்பத்தி தொழில் நடத்துபவர்களுக்கு பண, நிதி, உருவ மற்றும் நிறுவனச் சலுகைகள் வழங்குதல் (உள்நாட்டு மக்களும், நிறுவனங்களும் பாதிக்கப்படும்)

2. இறக்குமதி கட்டுப்பாடு

இறக்குமதியை கட்டுப்படுத்தும் கீழ்கண்ட வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி இறக்குமதியை கட்டுப்படுத்தலாம். i) இறக்குமதி மீது வரிவிதித்தல் முன்பே விதிக்கப்பட்டிருந்தால் விகிதத்தை அதிகப்படுத்தலாம். ii) பங்களவு நிர்ணயித்து இறக்குமதியை குறைக்கலாம். பங்களவு என்பது இறக்குமதி அளவை நிர்ணயித்தலாகும். iii) கட்டுபாடு அல்லது தவிர்ப்பு என்ற முறையில் அத்தியாவசியமற்ற பொருட்களை குறைப்பது. ஆனால் இது கடத்தலை ஊக்குவிக்கும்.

IV. இதர வழிமுறைகள்

இதுவரை நாம் கற்றுக்கொண்ட வழிமுறைகள் மட்டுமல்லாமல், இன்னும் சில வழிமுறைகளையும் பின்பற்றி அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சமநிலையை உருவாக்க முடியும். அவையாவன

i) வெளிநாட்டுக்கடன்

ii) சலுகைகள் மூலம் வெளிநாட்டு மூலதனத்தை ஈர்த்தல்

iii) வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்த்தல்

iv) வெளிநாடுவாழ் மக்களின் அனுப்புதல்களை நாட்டுக்குள் கொண்டு வர ஊக்கமளித்தல்

v) இறக்குமதியாகும் பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல்.

7.9 பண மாற்று வீதம்

பண மாற்று வீதத்தை அந்நிய செலாவணி மாற்று வீதம் என்ற சொல்லை பயன்படுத்தியும் குறிப்பிடலாம்.

7.9.1 அந்நிய செலாவணியின் பொருள்விளக்கம் (FOREX)

ஒரு நாட்டின் மைய வங்கியின் இருப்பில் உள்ள மற்ற நாடுகளின் பணமே அந்நிய செலாவணி என பொருள் கொள்ளலாம். ஆங்கிலத்தில் Forex என்ற சுறுக்க சொல்லை பயன்படுத்தியும் குறிப்பிடுகிறார்கள். ஒவ்வொரு நாட்டுக்கும் தனியான நாணயமும் நாணய வெளியீட்டு முறையும் உள்ளது. இவற்றை மற்ற நாட்டு பணமாக மாற்றும் செயல்முறைகளையும் விதிகளையும் மற்றும் அலுவலக அமைப்புகளையும் அந்நிய செலவாணி என்ற சொல் விரிவாக குறிக்கிறது. இந்த அமைப்பு முறையே நாடுகளுக்கிடையிலான பண பரிவர்த்தனைக்கு வழிமுறைகளை செய்து கொடுக்கிறது.

7.9.2 செலாவணி வரைவிலக்கணம்

"அந்நிய செலாவணி என்பது ஒரு நாட்டின் பணத்தை மற்ற நாட்டுப் பணமாக மாற்றும் மற்றும் ஒரு நாட்டிலிருந்து பிற நாட்டிற்குப் பணத்தை மாற்றும் முறையே ஆகும்."

7.9.3 செலாவணி மாற்று வீதம்

அந்நிய செலாவணி சந்தையில் பரிவர்த்தனைகள் சந்தையில் நிலவுகின்ற பணமாற்று வீதத்தில் நடைபெறுகிறது. இது அயல் பண அளவில் உள்நாட்டு பணத்தின் மதிப்பாகும். நாடுகள் அவர்களின் பணத்தை பல முகமதிப்பு இனங்களாக (Denomination) பிரித்து வெளியிடுகிறார்கள். ஒரு அலகு அயல்பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணத்தை கொடுக்கிறோம். என்பதே பணமாற்று வீதமாகும். உதாரணமாக ஒரு அமெரிக்க டாலரைப் பெறுவதற்கு ₹75 இந்திய ரூபாய் கொடுப்பதை ரூபாய் டாலர் மாற்று வீதம் எனலாம். இதே போன்று மற்ற நாட்டு பணத்தில் இந்திய ரூபாயின் மதிப்பை இணையத்தில் தேடி தெரிந்து கொள்ளலாம். மாற்று வீதத்தை இரண்டு வகைகளில் குறிப்பிடலாம்.

1. ஒரு அலகு அயல் பணத்திற்கு (1 USD) எத்தனை அலகு உள்நாட்டுப் பணம் (₹) நிகரானது உதாரணமாக $1 = ₹75
2. எத்தனை அலகு வெளிநாட்டுப் பணத்துக்கு (USD) ஒரு அலகு உள்ளூர் பணம் (₹1) நிகரானது.

உதாரணமாக,

1 அமெரிக்க டாலர் = ₹70 அல்லது

₹1 = U.S 1.42 சென்ட்

₹1 = $1 => 1947

₹70 = $1 => 2018

செலாவணி விகிதம்

ஒரு நாட்டின் பணத்தை மற்றொரு நாட்டின் பணத்திற்கு மாற்றும் விகிதம்



7.9.4. சமநிலை பணமாற்றுவீதம் – வரைவிலக்கணம்

"ஒரு குறிப்பிட்ட காலத்தில் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையில் நிறுத்தி வைக்கும் பணமாற்று வீதம் சமநிலை பணமாற்று வீதம்"

– ரேகனர் நர்க்ஸ்.

7.9.5. சமநிலை பணமாற்று வீதம் நிர்ணயமாதல்

அந்நிய செலாவணி சந்தையில் சமநிலை பணமாற்று வீதம் பொது விலை நிர்ணய கோட்பாட்டின்படி நிர்ணயமாகிறது. சந்தை விசைகளான தேவையளவும் வழங்களளவும் (அளிப்பு) ஒருங்கே செயல்பட்டு சமநிலை விலையை நிர்ணயிக்கும் என்பதே பொது விலை நிர்ணயக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டின்படி பார்த்தால் அந்நிய செலாவணிக்கான தேவையளவும் வழங்கலளவும் சமமாகுமளவில் சமநிலை பணமாற்றுவீதம் நிர்ணயமாகும். வரைபடத்தில் அந்நிய செலாவணி தேவை மற்றும் அளிப்பு வளைகோடுகள் சந்திக்கும் வெட்டுப்புள்ளியில் சமநிலை பணமாற்று வீதம் நிர்ணயமாகும்.



வரைபடம் 7.3 அந்நிய செலாவணியின் தேவையும் அளிப்பும்

மேலே உள்ள வரைபடத்தில் செங்குத்து அச்சு பண மாற்று வீதத்தையும் படுகிடை அச்சு அந்நிய செலாவனிக்கான தேவை மற்றும் அளிப்பு அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன. E என்ற புள்ளியில் அந்நிய செலாவணி தேவை வளைகோடு அளிப்பு வளைகோட்டை வெட்டுகிறது. இந்தப் புள்ளியில் அந்நிய செலாவணி தேவை மற்றும் அளிப்பு அளவு ஒன்றுக்கொன்று சமமாவதால் பணமாற்று வீதம் சமநிலையை அடைகிறது. தேவையும் (DD) அளிப்பும் (SS)சந்திக்கும் வெட்டுப் புள்ளியில் (E) பணமாற்று வீதம் சமநிலையை அடைகிறது. தேவையும் அளிப்பும் OQ என்ற அளவில் இருக்கும் பொழுது நிர்ணயமாகும் OP_2 என்ற பணமாற்று வீதமே சமநிலை பணமாற்று வீதமாகும்.

7.9.6. பண மாற்று வீதம் நிர்ணய முறைகள்

பண மாற்று வீதம் இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது. அவையாவன 1) நிலையான பணமாற்று வீதம் மற்றும் 2) மாறுபடும்/ நிலையற்ற பண மாற்று வீதம். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நிர்வகிக்கப்பட்ட பணமாற்று வீத நிர்ணமுறை ஒன்றும் உண்டு. இந்தியாவில் இவ்வகையான முறையே பின்பற்றப்படுகிறது.

1. நிலையான பணமாற்று வீதம்

மாறாத பணமாற்று வீதத்தை நிலையான பண மாற்று வீதம், மற்றும் நிலைநிறுத்தப்பட்ட பணமாற்று வீதம் என்ற பெயர்களாலும் குறிப்பிடலாம். ஒரு நாட்டின் அரசாங்கம் மைய வங்கியின் மூலம் பணமாற்று வீதம் நிர்ணயித்தால் அதை மாறாத பண மாற்று வீதம் என்கிறோம். தங்க மாற்று பன்னாட்டு பணவியல் முறையில் (Gold Standard) நாடுகளின் பணமாற்று மதிப்பு தங்கத்தின் அளவில் நிர்ணயிக்கப்பட்டது.

12-Economics-Tamil-Chapter_7.indd 168 2/6/2020 12:19:56 PM

2. மாறுபடும்/நிலையற்ற பண மாற்று வீதம்

அந்நிய செலாவணி சந்தை விசைகளான மாறுகின்ற அந்நிய செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பண மாற்று வீதமாகும். இதை மிதக்கும் பணமாற்று வீதம் என்றும் அழைக்கலாம்.

7.9.7. பணமாற்று வீத வகைகள்

கீழ்கண்ட நான்கு வடிவங்களில் பணமாற்று வீதத்தை வகைப்படுத்தலாம். அ) பெயரளவு பண மாற்று வீதம் ஆ) மெய்யான பண மாற்று வீதம் இ) பெயரளவு செயலாக்க பண மாற்று வீதம் (NEER) ஈ) மெய்யான செயலாக்க பண மாற்று வீதம் (REER).

உதாரணமாக: $1 = ₹ 75 என்றால்

பெயரளவு பணமாற்று வீதம் = 75/1 = 75

இது இருதரப்பு பெயரளவு பணமாற்ற வீதமாகும்.

மெய்யான பண மாற்று வீதம்	$= \frac{eP_f}{P}$

இங்கு P = உள்நாட்டு விலை

P_f = வெளிநாட்டு விலை (USD)

e = பெயரளவு பண மாற்று வீதம்

ஒரு பேனாவின் விலை இந்தியாவில் ₹ 50 அமெரிக்காவில் $ 5,

மெய்யான பணமாற்று வீதம் $= \frac{75x5}{50} = 7.5$

மெய்யான பணமாற்றுவீதம் 1 என கணக்கிடப்பட்டால், இரண்டு நாடுகளின் பணமும் சமமான வாங்கும் ஆற்றல் பெற்றுள்ளதாக புரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக பேனாவின் விலை அமெரிக்காவில் $0.66 என்றால்

மெய்யான பண மாற்றம் $= \frac{0.66x75}{50} \cong 1$

இந்நிலையிலிருந்தால் இந்திய ரூபாயும் அமெரிக்க டாலரும் சமமான வாங்கும் ஆற்றல் பெற்றவையாக கருதலாம்.

7.9.8. பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

நாடுகளுக்கிடையிலான பன்னாட்டு வாணிக உறவுகளுடன் தொடர்புடைய பல காரணிகள் பணமாற்று வீதத்தை தீர்மானிக்கின்றன.

செலாவணி மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

1. பணவீக்க அளவு வேறுபாடுகள்
2. வட்டி விகித வேறுபாடுகள்
3. நடப்புக் கணக்குப் பற்றாக்குறை
4. பொதுக்கடன்
5. வாணிப வீதங்கள்
6. அரசியல், பொருளாதார உறுதித்தன்மை
7. பொருளாதாரப் பின்னிறக்கம்
8. ஊக வாணிகம்

1. பண வீக்க அளவு வேறுபாடுகள்

பண வீக்க அளவும் பணமாற்ற வீதமும் தலைகீழ் தொடர்புள்ளவை. மற்ற நாட்டு பணத்துடன் ஒப்பிடுகையில் தொடர்சியாக குறைவான பண வீக்க அளவு நிலவும் நாட்டின் பணத்தின் வாங்கும் ஆற்றல் அதிகரிப்பதனால் குறைந்த பண வீக்க அளவு அந்த நாட்டின் பணமாற்ற வீதத்தை உயர்த்துகிறது.

2. வட்டி வீத வேறுபாடுகள்

வட்டி வீதத்திற்கும் பண மாற்ற வீதத்திற்கும் நேரடி உறவு நிலவுகிறது. ஒரு

12-Economics-Tamil-Chapter_7.indd 169 2/6/2020 12:19:56 PM

நாட்டின் மைய வங்கி வட்டி வீதத்தை உயர்த்தி வெளிநாட்டு முதலீட்டை கவர்ந்திழுக்க முடியும். இதன் விளைவாக பணமாற்று வீதம் உயரும்

3. நடப்பு கணக்கு பற்றாக்குறை

அயல்நாட்டுச் செலுத்துநிலையின் நடப்பு கணக்கில் பற்றாக்குறை வரவைவிட செலுத்துகை அதிகமிருப்பதைக் காட்டுகிறது. அயல்நாட்டு செலாவணிக்கான கூடுதல் தேவை நாட்டின் பண மாற்று வீதத்தை குறைத்துவிடும்.

4. பொது கடன்

பொது கடன் பண வீக்கத்தை உருவாக்கும் பண வீக்கம் பண மாற்றுவீதத்தை குறைத்து விடும்.

5. வாணிக விகிதம்

இறக்குமதி விலையைவிட ஏற்றுமதி விலை வேகமாக அதிகரித்தால் அந்த நாட்டின் வாணிப விகிதம் மேம்படும். சாதகமான வாணிப விகிதம் நாட்டின் ஏற்றுமதி தேவையை அதிகரிப்பது மேம்பட்டால் பணமாற்று வீதம் உயரும்.

6. அரசியல் மற்றும் பொருளாதார உறுதிநிலை

ஒரு நாட்டின் அரசியல் பொருளாதார உறுதியான சூழ்நிலை பணமாற்று வீதத்தையும் உறுதிபடுத்தும். பண மதிப்பு உயர்வதால் வெளிநாட்டு முதலீட்டை கவர்ந்திழுக்கும்.

7. பொருளதார பின்னிறக்கம்

பொருளாதார பின்னிறக்க காலத்தில் ஒரு நாட்டில் வட்டி வீதம் வீழ்ச்சி அடையும். வட்டி வீத வீழ்ச்சி வெளிநாட்டு முதலீட்டை குறைத்து விடும். இதன் விளைவாக பணமாற்று வீதமும் வீழ்ச்சி அடையும்

8. ஊக வாணிகம்

ஒரு நாட்டின் பணமாற்று வீதம் குறுகிய காலத்தில் அதிகரிக்குமென கணிக்கப்பட்டால் நிதி சந்தை ஊக வாணிப முதலீட்டாளர்கள் மத்தியில் அந்த நாட்டின் பணத்திற்கு தேவை கூடும். இதனால் அந்த நாட்டின் பண மாற்று வீதம் அதிகரிக்கும்.

மேற்கண்ட காரணிகள் மட்டுமல்லாமல் உலக அரசியல் சூழ்நிலையும் ஒரு நாட்டுக்கெதிராக பொருளாதார கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரமும் பண மாற்று வீதத்தை தீர்மானிக்கும் ஆற்றல் மிக்க காரணிகளாகும்.

7.10 அந்நிய நேரடி மூலதனமும் (FDI) பன்னாட்டு வாணிகமும்

பன்னாட்டுப் பொருளாதாரத்தில் அந்நிய நேரடி முதலீடு முக்கிய பங்கு வகிக்கிறது. வெளிநாட்டு நேரடி மூலதனமும் பன்னாட்டு வாணிகமும் மிகவும் நெருக்கமுடையவை. வளரும் நாடுகளின் இயற்கை வளங்கள் மற்றும் தோட்டப்பயிர் துறைகளில் மிக அதிக அளவு வெளிநாட்டினர் முதலீடு செய்து பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சிக்கு துணைபுரிந்தனர். வெளிநாட்டு நிறுவனங்களின் உற்பத்தி இறக்குமதிக்கு மாற்றாகவும் செயல்பட்டு இறக்குமதியை கட்டுப்படுத்துகிறது.

வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் இயந்திரங்கள், தொழில் நுட்பம், இடு பொருட்கள் மற்றும் அரிதான நுகர்வு பொருட்கள் போன்றவையும் ஒரு நாட்டுக்குள் வரும். ஏற்றுமதி செய்து ஈட்டிய அந்நிய செலாவணி இறக்குமதி மீது செலவழிக்க போதவில்லையென்றால் வெளிநாட்டு நேரடி மூலதனத்தைக் கொண்டு ஈடு செய்ய முடியும். அந்நிய செலாவணி பற்றாக்குறையை போக்குதல், வேலை வாய்ப்பை உருவாக்குதல்

12-Economics-Tamil-Chapter_7.indd 170 2/6/2020 12:19:56 PM

மற்றும் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல் போன்ற காரணங்களுக்காகவும் வெளிநாட்டு நேரடி முதலீடு விரும்பப்படுகிறது. பல நாடுகள் இறக்குமதிக்கு பதிலாக வெளிநாட்டு மூலதனத்தை விரும்புகிறார்கள்.

ஒரு முதலீடு பன்னாட்டு முதலீடாக மாறும் நிலை



ஒரு நாட்டின் (வழங்கும் நாடு) மக்களும் அரசாங்கமும் மற்றொரு நாட்டின் (பெறும் நாடு) தொழிற்சாலைகளில் செய்யும் முதலீடு பன்னாட்டு முதலீடாக மாறுகிறது

இயற்கை வளங்கள் மற்றும் கனிம சுரங்கங்கள் மற்றும் அதிக லாப விகிதம் உள்ள தொழில்கள், போன்ற துறைகளை குறிவைத்து வெளிநாட்டு நேரடி முதலீடு வருகிறது. எந்நேரமும் திரும்ப வெளியேறிவிடும் அபாயம், உள்நாட்டு சட்ட விதிகளை மீறுதல் போன்ற கெடுதல்களும் வெளிநாட்டு மூலதனத்தில் உண்டு. எனவே, வெளிநாட்டு மூலதனத்தின் நன்மைகள் அதிகமா, ஆபத்து அதிகமா என்பது விவாதத்துக்குரியது.

அமெரிக்க டாலரின் தேவை அதிகரிப்பை IMF மற்றும் உலக வங்கி கொள்கைகள் (நிதி – வங்கி கொள்கை) அமெரிக்க டாலரின் மதிப்பை தொடர்ந்து அதிகமதிப்புடன் வைத்திருப்பதே மறைமுக நோக்கமாகும்.

7.10.1 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் (FDI) பொருள் விளக்கம்

வேறுநாட்டில் முதலீடு செய்து நிறுவனத்தின் மேலாண்மையை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதையே வெளிநாட்டு நேரடி மூலதனம் என்கிறோம். பன்னாட்டு வணிக நிறுவனங்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்வதை இது குறிக்கிறது. இது வெளிநாட்டு நிதி மூலதனமல்ல. வெளிநாட்டு நிதி மூலதனம் குறுகியகால லாப நோக்கில் நிதி சந்தையில் செய்யப்படும் முதலீடாகும். நிறுவனங்களின் மேலாண்மையை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வது நிதி மூலதனத்தின் நோக்கமல்ல.

வெளிநாட்டு நிதி மூலதனம் (FPI)

ஒரு நாட்டில் வெளிநாட்டினர் வங்கிகளில் நிறுவன பங்கு வாங்குவதில், கடன் பத்திரம் வாங்குவதில் மற்றும் முன் பேர. வர்த்தகத்தில் முதலீடு செய்வதை வெளிநாட்டு நிதி மூலதனம் (Foreign Portfolio Investment) எனலாம். இது வாணிபச் செலுத்துச் சமநிலை மூலதனக் கணக்கின் ஒரு பகுதியாகும்.

7.10.2 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள்

கீழ்கண்டவையே வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள்

1. விற்பனையை விரிவுப்படுத்துதல்
2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்
3. வாணிக பரவலாக்கம்
4. போட்டி இடர்களை குறைத்தல்

12-Economics-Tamil-Chapter_7.indd 171
2/6/2020 12:19:56 PM

வெளிநாட்டு நிதி நிறுவன முதலீடு (FII)

வெளிநாட்டு நிதி நிறுவன முதலீடு என்பது பணசந்தை மற்றும் முன்பேர நிதி சந்தைகளில் நிதி நிறுவனங்கள் வழியாக செய்யப்படும் நிதி மூலதனமாகும். குறுகிய கால லாபத்திற்காக செய்யப்படும் முதலீடாகும். எடுத்துக்காட்டாக, ஐக்கிய நாடுகளிலுள்ள ஒரு பரஸ்பர நிதி நிறுவனம் இந்தியாவை சார்ந்த ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்யலாம்.

7.10.3 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகள்

வெளிநாட்டு முதலீடு பெரும்பாலும் நேரடி முதலீடாகவே நாடுகளுக்குள் நுழைகிறது. வெளிநாட்டு நேரடி முதலீட்டின் நன்மைகளை பட்டியலிடுவோம்

1. வெளிநாட்டு நேரடி மூலதனம் அது சென்றடையும் நாட்டின் மூலதன அளவை உயர்த்தி வேலைவாய்ப்பு அளவையும் அதிகரிக்கும்

2. நேரடி வெளிநாட்டு மூலதனம் சென்றடையும் நாட்டிற்கு புதிய தொழில் நுட்பத்தையும் கொண்டு வருகிறது.

3. வெளிநாட்டு நேரடி முதலீடு நுழையும் நாட்டின் அரசுக்கு நிறுவன இலாப வரி செலுத்துவதன் மூலம் வருவாயை கொண்டு வருகிறது.

4. லாபத்தின் ஒரு பகுதியை மறுமுதலீடு செய்வதன் மூலம் தொழில்வளம் பெருகும்

5. புதிய தொழில் மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்தும்

6. ஏற்றுமதியை அதிகப்படுத்தி இறக்குமதிக்கான அவசியத்தை குறைத்து அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையை நீக்கும்

7. போட்டியை உருவாக்கி உள்நாட்டு முற்றுரிமையை தகர்க்கும்

8. முதலீடு செய்த நாட்டின் உள்நாட்டு உற்பத்தியின் நிகர மதிப்புக் கூடுவது முதலீட்டிலிருந்து கிடைத்த வருவாயைவிட அதிகமாக இருந்தால் வெளிநாட்டு முதலீட்டிலிருந்து கிடைக்கும் தனியார் நிறுவனத்திற்கான லாபத்தைவிட சமூகத்துக்கு கிடைக்கும் பலன் அதிகம்

9. வெளிநாட்டு நேரடி மூலதனம் முதலீட்டையும் அந்நிய செலாவணியையும் கொண்டு வருவதன் மூலம் சேமிப்பு முதலீடு இடைவெளியையும் நிரப்ப உதவுகிறது.

10. உள்நாட்டு துணைத்தொழில் நிறுவனங்கள் வளரவும், வெளிநாட்டு நிறுவனங்களோடு இணைந்து உள்நாட்டு சிறுதொழில்கள் வளரவும் உதவும்.

11. உள்நாட்டுத் தொழில் முனைவோர்களை வெளிநாட்டு மூலதனம் மற்ற நாடுகளில் முதலீடு செய்ய தூண்டுகிறது. இந்திய நிறுவனங்கள் நேபாளம், உகாண்டா, எத்தியோப்பியா மற்றும் கென்யா போன்ற நாடுகளில் முதலீடு செய்துள்ளது. மொரிஷியஸ் மற்றும் சிங்கப்பூர் போன்ற சிறிய நாடுகளின் வழியாகவே மிக அதிக அளவிலான முதலீடு இந்தியாவுக்குள் வந்துள்ளது.

7.10.4. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் தீமைகள்

வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் தீமைகளைக் காணலாம்.

1. முன்னுரிமைத் தர வேண்டிய துறைகளுக்கு பதிலாக உயர்ந்த லாப வாய்ப்புள்ள துறைகளில் வெளிநாட்டு முதலீடு அதிகமாக செய்யப்படுகிறது.

12-Economics-Tamil-Chapter_7.indd 172 2/6/2020 12:19:56 PM

2. நுழையும் நாட்டுக்குப் பொருத்தமற்ற தொழில்நுட்பத்தை கொண்டு வருகிறது

3. லாபத்தை தாய்நாட்டுக்கு எடுத்து செல்லும் காலங்களில் வெளிநாட்டு முதலீடு அயல்நாட்டு செலுத்துநிலை சமமின்மைக்கு வழி வகுக்கிறது.

4. முதலீடு செய்த நாட்டின் உள்நாட்டு அரசியலில் முதலீட்டு உரிமையாளர்கள் தலையிடுகிறார்கள்

5. வெளிநாட்டு நிறுவனத்தார் அறமற்ற வணிக நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

6. சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனங்கள் நசுக்கி விடுகிறது.

7. தங்களுடைய பொருளாதார பலத்தால் போட்டி நிறுவனங்களை மூடவைத்து சில்லோர் முற்றுரிமை அல்லது முற்றுரிமை சூழலை உருவாக்குகிறது வெளிநாட்டு மூலதனம்

8. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு சிறப்பு சலுகைகளை நாடுகள் வழங்குவதால் உள்நாட்டு சேமிப்பு குறைதல், வாணிக வீதம் பாதகமாதல், அயல்நாட்டு செலுத்து நிலை சமமின்மையை சரிசெய்வதில் சிரமங்கள் போன்ற தீய விளைவுகள் உருவாகிறது என்கிறார்.

7.10.5. இந்தியாவின் வெளிநாட்டு நேரடி மூலதனம்

இந்தியாவில் 1991ல் பொருளாதார சீர்த்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டது. இது இந்தியாவின் சந்தையை வெளிநாட்டு மூலதனத்திற்கு திறந்து விட்டது. தொடர்ந்து வெளிநாட்டு மூலதனம் இந்தியாவில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இது உழைப்பு மற்றும் முதலீட்டு இடம் பெயர்தலை தாராளமாக்கியது, புதிய தொழில் நுட்பத்தை கொண்டுவந்தது, புதிய மேலாண்மை நுட்பங்களை அறிமுகம் செய்தது மேலும் இந்தியாவுக்கு பன்னாட்டு சந்தையில் நுழையும் வாய்ப்பையும் உருவாக்கியது.

வெளிநாட்டு மூலதனத்தால் பலனடைந்த இந்தியத் துறைகள்

(i) நிதித் துறை

(ii) காப்பீடு

(iii) தகவல் தொடர்பு

(iv) சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை

(v) மருந்து உற்பத்தி

(vi) மென்பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்பம்

இந்தியாவில் வெளிநாட்டு மூலதனம் தடை செய்யப்பட்டத் துறைகள்

(i) போர்க்கருவிகள் மற்றும் ஆயுத உற்பத்தி

(ii) அணு ஆற்றல்

(iii) தொடர்வண்டி போக்குவரத்து

(iv) நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி

(v) இரும்புத் தாது, மாங்கனீசு, கிரோம், ஜிப்சம், சல்பர், தங்கம், வைரம், தாமிரம் போன்ற தாது சுரங்கத் துறை

வெளிநாட்டு நேரடி மூலதனம் இந்தியாவுக்குள் 97 மில்லியன் அளவுக்கு 1990 – 91ல் வந்தது. இது 5,535 மில்லியனாக 2004 – 05ல் இருந்தது. இது 2011 – 12 32,955 ஆக உயர்ந்தது. UNCTAD உலக முதலீட்டு அறிக்கை 2018ன்படி 2016ல் 44 பில்லியனாக இருந்த வெளிநாட்டு நேரடிமூலதனம் 2017ல் 40 பில்லியனாக குறைந்துள்ளது.

தொகுப்புரை

பன்னாட்டுப் பொருளியல் பொருள், பணிகள், மூலதனம் மற்றும் பண பரிவர்த்தனைகளை விவரிக்கும் பாடப்பிரிவாகும். நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஏன் ஈடுபடுகின்றன மற்றும்

அதன் விளைவுகள் என்ன என்பதை விளக்கும் கோட்பாடுகளில் மூன்று கோட்பாடுகளை பயின்றோம். பன்னாட்டு வாணிகத்தின் பலன்கள், வாணிப வீதம், அயல்நாட்டுச் செலுத்துநிலை போன்றவைப் பற்றியும் அவற்றின் சமநிலை மாறினால் மீண்டும் சமநிலையை அடைவதற்கான வழிமுறைகளையும் கற்றுக்கொண்டோம்.

இரண்டு விதமான பண மாற்று வீத நிர்ணய முறைகள் மற்றும் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மை தீமைகளையும் விவாதித்தோம்.

பன்னாட்டு பொருளாதார அமைப்புகளான IMF, IBRD, WTO மற்றும் வாணிப பகுதிகளான SAARC, ASEAN, BRICS போன்ற அமைப்புகள் பன்னாட்டு வாணிபத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பதை பற்றி அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

சிந்தித்து செயலாற்றுதல்

1. இந்தியப் பணம், அமெரிக்க டாலரிடையேயான செலாவணி விகிதம் இது $1 = ₹65 என வைத்துக்கொள்வோம். இது $1 = ₹55 என மாறினால், எப்பணத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது. எப்பணத்தின் மதிப்பு குறைந்துள்ளது?
2. நம்மாநிலத்தின் முக்கிய நபரின் ஆரோக்கியத்தைச் சோதித்தறிய இங்கிலாந்திலிருந்து ஒரு மருத்துவர் அழைக்கப்படுகிறார் எனக் கொள்வோம். இம்மருத்துவருக்கு வழங்கப்படும் கட்டணங்கள் வாணிபச் செலுத்துச் சமநிலைக் கணக்குகளில் எக்கணக்கில் பதிவுசெய்யப்படும்?

அருஞ்சொற்பொருள்

- **பன்னாட்டுப் பொருளியல்** : பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை படிப்பதற்கான பொருளியலின் பாடப் பிரிவாகும்
- **உள்நாட்டு வாணிகம்** : ஒரு நாட்டின் புவி எல்லைகளுக்குள் நடைபெறும் வாணிகம்
- **பன்னாட்டு வாணிகம்** : ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையிலான வாணிகம். இது ஒரு நாட்டின் புவி மற்றும் அரசியல் எல்லைகளைக் கடந்து நடைபெறும் வாணிகமாகும்.
- **முழு செலவு வேறுபாடுகள்(Absolute cost):** ஒரு பண்டத்தினை உற்பத்தி செய்ய ஆற்றப்படும் உண்மைச் செலவுகளில் இரு நாடுகளிடையே காணப்படும் வேறுபாடு.
- **ஒப்புமைச் செலவு வேறுபாடுகள்** : இரு பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஆற்றப்படும் முழுச் செலவுகளில் இரு நாடுகளிடையேயான வேறுபாடு
- **உற்பத்திக் காரணி கிடைக்கும் அளவு (Factor Endowment)** : ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்திக் காரணிகளைப் பெற்றுள்ள அளவு
- **வாணிக வீதம்** : ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமிடையிலான விகிதம்
- **வாணிபக் கொடுப்பல் நிலை** : பொருள் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமிடையிலான கழித்தல் (Subtraction) வேறுபாடு. பொருள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பின் நிகர மதிப்பு என்றும் புரிந்து கொள்ளலாம்.
- **அயல்நாட்டுச் செலுத்துநிலை** : ஒரு நாடு உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளதார பரிவர்த்தனைகளை கணக்கியல் முறையில் தொகுத்தளிக்கும் அறிக்கையே அயல்நாட்டுச் செலுத்துநிலை
- **பண மதிப்பிறக்கம்** : ஒரு நாட்டின் பணத்தை மற்ற நாடுகளின் பணமாக மாற்றும் வீதத்தை அந்நாட்டின் மைய வங்கி குறைத்து நிர்ணயம் செய்தல்

12-Economics-Tamil-Chapter_7.indd 174 2/6/2020 12:19:56 PM

- **அந்நிய செலாவணி :** ஒரு நாட்டின் மைய வங்கியின் இருப்பில் உள்ள தங்கம் மற்றும் பிறநாடுகளின் பணம்

- **பண மாற்று வீதம் :** ஒரு நாட்டின் பணத்தின் ஒரு அலகை மற்ற நாடுகளின் பணத்தில் எத்தனை அலகுகளுக்கு பரிமாற்றிக்கொள்கிறோம் என்ற வீதம்

- **மாறா பண மாற்று வீதம் :** ஒரு நாட்டின் மைய வங்கியால் பண மாற்று வீதத்தை நிர்ணயம் செய்யும் முறை

- **மாறுகின்ற பணமாற்று வீதம் :** அந்நிய செலாவணி சந்தை விசைகளான அந்நிய செலாவணி தேவையளவும் அளிப்பினளவும் தன்னிச்சையாக செயல்பட்டு நிர்ணயமாகும் பண மாற்று வீதமே மாறுகின்ற பணமாற்று வீதம்

- **வெளிநாட்டு நேரடி மூலதனம் :** ஒரு நாட்டில் வேறுநாட்டு நிறுவனம் உற்பத்தி துறையில் முதலீடு செய்வதையே வெளிநாட்டு நேரடி மூலதனம் என்கிறோம்.

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

46ZVIV

சரியான விடையை தெரிவு செய்க:

1. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ______
   அ. வெளிவாணிகம்
   ஆ. உள்வாணிகம்
   இ. மண்டலங்களுக்கிடையான வாணிகம்
   ஈ. உள்நாட்டு வாணிகம்

2. கீழ்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது?
   அ. ஒரு பொருளின் மேம்பாட்டு கால கட்டம்
   ஆ. உற்பத்தி காரணிகளின் ஒப்பீட்டு விலை
   இ. அரசாங்கம்
   ஈ. மேற்கண்ட அனைத்தும்

3. பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம்
   அ. வணிகக் கட்டுப்பாடுகள்
   ஆ. உற்பத்திக் காரணிகள் இடம் பெயர இயலாமை
   இ. நாடுகளின் கொள்கை வேறுபாடுகள்
   ஈ. மேற் சொன்ன அனைத்தும்

4. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படை காரணம்
   அ. ஒரு நாடு ஒரு குறிப்பிட்டப் பொருளையும் வேறு நாடு மற்றொரு பொருளையும் உற்பத்தி செய்ய விரும்புகிறது
   ஆ. உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது
   இ. பன்னாட்டு வாணிகம் லாப குவிப்பு வாய்ப்பை அதிகப்படுத்துகிறது
   ஈ. நாடுகளில் நிலவும் வட்டி வீதமும் வெவ்வேறு அளவில் உள்ளது

5. புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?
   அ. முழுமைச் செலவு
   ஆ. ஒப்புமைச் செலவு
   இ. உற்பத்திக் காரணிக் கோட்பாடு
   ஈ. எதுவுமில்லை

6. பண மாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை

அ. பண சந்தை

ஆ. அந்நிய செலாவணி

இ. பங்கு சந்தை

ஈ. மூலதன சந்தை

7. கீழ்கண்ட எந்த பணமாற்று நிர்ணயமுறையில் சந்தை விலைகளான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கிறது.

அ. மாறா பணமாற்று வீதம்

ஆ. மாறுகின்ற பண மாற்று வீதம்

இ. நிலைத்த பணமாற்று வீதம்

ஈ. அரசு ஒழுங்காமைப்பும் முறை

8. ஏற்றுமதி நிகரம் என்பது

அ. ஏற்றுமதி X இறக்குமதி

ஆ. ஏற்றுமதி + இறக்குமதி

இ. ஏற்றுமதி – இறக்குமதி

ஈ. பணிகள் ஏற்றுமதி

9. கீழ்கண்டவர்களில் யார் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தவர்

அ. ஜேக்கப் வைனர்

ஆ.G.S. டோரன்ஸ்

இ. எப்.டபில்யூ டாசிக்

ஈ. ஜே.எஸ் மில்

10. வாணிப வீதம் __________ பற்றி குறிப்பிடுகின்றது.

அ. பொருள் ஏற்றுமதி இறக்குமதி விகிதம்

ஆ. இறக்குமதி வழி விகிதம்

இ. ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்

ஈ. (அ) வும் (இ)யும்

11. சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியைவிட _________ஆக இருக்கும்

அ. அதிகமாக

ஆ. குறைவாக

இ. கிட்டத்தட்ட சமமாக

ஈ. சமமாக

12. இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருத்தலை கீழ்கண்ட வழிகளில் எது சரி செய்யும்

அ. சுங்கத் தீர்வையைக் குறைத்தல்

ஆ. ஏற்றுமதி வரியை அதிகரித்தல்

இ. ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல்

ஈ. இறக்குமதிக்கு ஊக்கமளித்தல்

13. அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள்

அ. புலனாகும் பொருட்கள் மட்டும்

ஆ. புலனாகாத பணிகள் மட்டும்

இ. அ மற்றும் ஆ

ஈ. பண்ட வாணிபம் மட்டும்

14. அயல்நாட்டுச் செலுத்துநிலை கூறுகள் கீழ் கண்டவைகளில் எவை

அ. நடப்பு கணக்கு

ஆ. மைய வங்கி இருப்பு

இ. மூலதன கணக்கு

ஈ. அ,ஆ,இ மூன்றும்

15. வாணிபக் கொடுப்பல் நிலை அறிக்கையில்

அ. பொருள் பரிவர்த்தனை மட்டும் பதிவாகிறது

ஆ. பொருள் மற்றும் பணிகள் பரிவர்த்தனைகள் பதிவாகிறது

இ. மூலதனம் மற்றும் நிதி பரிவர்த்தனைகள் பதிவாகிறது

ஈ. மேற்கண்ட அனைத்தும் பதிவாகிறது

12-Economics-Tamil-Chapter_7.indd 176 2/6/2020 12:19:56 PM

16. சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பயணம் தொடர்புடைய பரிவர்த்தனைகள் அயல்நாட்டு செலுத்துநிலையின் எந்த கணக்கின் கீழ் பதிவாகிறது

அ. பொருள் வாணிகக் கணக்கு

ஆ. பணிகள் வாணிக கணக்கு

இ. பணபரிவர்த்தனை கணக்கு

ஈ. மூலதன கணக்கு

17. சுழற்சி அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமற்ற நிலைக்கான காரணம்

அ. வாணிக சுழற்சியின் மாறுபட்ட கால கட்டம்

ஆ. வருவாய் மற்றும் விலை தேவை நெகிழ்ச்சி நாடுகளுக்கிடையே வேறுபடுதல்

இ. நீண்டகால பொருளாதார மாற்றங்கள்

ஈ. அ மற்றும் ஆ

18. கீழ்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது?

அ. வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்

ஆ. வெளிநாட்டில் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்

இ. வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது

ஈ. முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவத்தை வெளிநாட்டில் தொடங்குவது

19. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை?

அ. வங்கி

ஆ. அணு ஆற்றல்

இ. மருந்து உற்பத்தி

ஈ. காப்பீடு

20. கோட்பாட்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன

அ. பொருளதார வளர்ச்சி

ஆ. பன்னாட்டு வாணிப வளர்ச்சி

இ. வேலை வாய்ப்பு மற்றும் திறன் அதிகரித்தல்

ஈ. மேற்கண்ட அனைத்தும்

பகுதி – ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?

22. பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.

23. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக

24. பன்னாட்டுவாணிகத்தின்அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும், டேவிட் ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

25. வாணிப வீதத்தினை விளக்குக.

26. வாணிபச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?

27. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
அ	ஈ	ஈ	ஆ	இ	ஆ	ஆ	இ	அ	இ
11	12	13	14	15	16	17	18	19	20
அ	ஆ	இ	ஈ	அ	ஆ	ஈ	இ	ஆ	ஈ

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்

28. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக
29. பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை எழுது.
30. மொத்த மற்றும் நிகர பண்ட பரிமாற்று வாணிப வீதத்தை சுருக்கமாக எழுதுக
31. வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்குமிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக
32. இறக்குமதி பங்களவு என்றால் என்ன?
33. மாறுகின்ற பணமாற்று வீதத்தின் பொருள் தருக?
34. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக

பகுதி – ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக

35. உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்
36. ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி
37. புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும்
38. ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிப வீத வகைகளை விவரி
39. அயல் நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகளை அட்டவணை வடிவில் விளக்குக.
40. அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரி.
41. பண மாற்று வீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக.
42. பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.

செய்முறை

1. பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனம் அல்லது தொழிற்சாலைக்கு மாணவர்கள் அழைத்து சென்று அங்கு பின்பற்றப்படும் நடைமுறைகளையும், ஆற்றப்படும் நடவடிக்கைகளையும் அறியச்செய்தல்.
2. மாணவர்களை 'நாடுகளாக' குழுப்பிரித்து அவர்களிடையே சில பண்டங்களை மாற்றச் செய்து, அவர்கள் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடுவதுபோல் காட்டச் செய்தல்.

12-Economics-Tamil-Chapter_7.indd 178 2/6/2020 12:19:56 PM

பார்வை நூல்கள்

1. Bhargava, B.K (1992). Competition Success Review Economics for Civil Services Preliminary Examination, Sudha Publications Pvt. Ltd, New Delhi, 405 – 630.
2. Francis Cherunilam (2009). International Economics, Tata McGraw Hill Education Pvt. Ltd, New Delhi, 3–26,122–190, 357–373, 410–426.
3. Jhingan, M.L (2011). International Economics, Vrinda Publications (Pvt.) Ltd, Delhi, 295.
4. Mithani, D.M (2015). International Economics, Himalaya Publishing House, New Delhi, 1 – 250.
5. Neelamegam, V (2010). International Trade, Vrinda Publications (P) Ltd, Delhi, 1–160.
6. Sundharam, K.P.M (1986). Money, Banking, Trade and Finance, Sulthan Chand and Sons, New Delhi, 4.1 – 4.94.
7. True Man Book Company (2005). UGC NET / SET Economics, Danika Publishing Company, New Delhi, 156 – 205.

இணையதளங்கள்

1. http://www.studyingeconomics.ac.uk/module-options/international-economics/
2. http://cis01.central.ucv.ro/iba/files/summary.pdf
3. https://www.thoughtco.com/definition-of-international-economics-1146350
4. https://keydifferences.com/difference-between-balance-of-trade-and-balance-of-payment.html
5. https://www.youtube.com/watch?v=lKDfze_KodA
6. https://www.investopedia.com/terms/f/foreign-portfolio-investment-fpi.asp
7. https://www.investopedia.com/terms/f/fii.asp
8. http://www.eiiff.com/investment/foreign-institutional.html
9. https://connectusfund.org/17-big-advantages-and-disadvantages-of-foreign-direct-investment.